Registered No. M. 2330

"SIDDHANTHAM"

Vol. 42 — No. 1

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | கீலக தை 1969 ஜனவரி | இதழ் 1

உள்ளுறை

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம்.ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் ... இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் (2—2—69) ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவுசெலவுக் கணக்கு, பிற பொருள்கள் பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர்.

(செயலாளர்)

ஒருதிருத்தம்

சித்தாந்தம் மலர் 41, இதழ் 12-ல் வெளியான 'திருவாசகம்' என்னும் கட்டுரை அருள்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்' அவர்களால் எழுதப் பெற்றது எனத் தவறுதலாக வெளியிடப் பட்டுள்ளது. அது "திரு வ. வடலூரன் மு. ரா, தமிழ்ப் பேராசிரியர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி" எனும் அன்பரால் எழுதப்பட்டது. அதனை அன்பர்கள் திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(துணையாசிரியர்)

கீழ்க்காணும் அன்பர்கள் நம் சமாஜ ஆயுள் உறுப்பினர் களாகச் சேர்ந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1) திரு. வி. திருநாவுக்கரசு அவர்கள் பி. ஏ.,
மேல்நிலை எழுத்தர், வருவாய்த்துறை,
அரசாங்கத் தலைமைச் செயலகம்,
சென்னை—9.

2) திரு. K. L. பழநிசாமி அவர்கள் பி. ஏ., எல். டி.,
2, ஐந்தாவது குறுக்குத் தெரு,
டிரஸ்ட் புரம், சென்னை—24.

3) திருமதி. தாரா நடராசன் அவர்கள் எம்.பி.,பி.எஸ்,
பெசண்ட் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை—14.

4) திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள்
எம். ஏ., எம். லிட்,
தமிழ்க்கலை இல்லம்,
ஐயாவு நாயுடு தெரு,
இலட்சுமிபுரம், சென்னை-30.

Reg. M. 2330

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 42	கீலக ஞ தை 1969 ஜனவரி	இதழ் 1

சைவசித்தாந்த மகா சமாஜ
63வது ஆண்டு விழா தலைமைப் பேருரை.

—❀—

சிவநேயச் செல்வர்களே,

உங்கள் திருவடிகட்கு என் வணக்கம். இந்தச் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அறுபத்து மூன்றும் ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகிக்கும் அரும்பேற்றையும், பெரும் பொறுப்பையும் அடியனேற்கு அளித்துள்ள இச் சமாஜத்தினர் அனைவருக்கும், குறிப்பாக அதன் தலைவர், என் கெழுதகை நண்பர், திரு. ஜி. எம். முத்துசாமி பிள்ளை அவர்கட்கும் என் மனம் நிறைந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஃது 63வது ஆண்டு விழா; சைவ நாயன்மார்களுக்கு அறுபத்துமூவர் என்று பெயர். திருமயிலை நகர், அறுபத்து மூவர் திருவிழா ஆண்டுதோறும் நடாத்துதல்மூலம் ஒரு நிகரும் இல்லாது சிறந்தோங்கி மிளிர்கின்றது. எனவே அறுபத்து மூவர் புகழ்பாடி அன்னாரின் அடிச்சுவட்டில் நடக்கும் சில குறிக்கோள் உடைய சிவநேயர்கள் நிறைந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அறுபத்து மூன்றுவது ஆண்டு விழாவும் இந்த மயிலை நகரிலேயே நிகழுதல் எத்தகையதோர் அதிசயம்? எவ்வளவு பெரியதோர் அற்புதம்?

அடியேனது அறுபத்தோராவது ஆண்டு விழாவும் சமாஜத்தின் அறுபத்து மூன்றுவது ஆண்டு விழாவும் ஓரே

திங்களில் ஓரே ஆண்டில் நடைபெறுதல் ஒரு பொருத்தம்; அதைவிடப் பெரியதொரு பொருத்தம் அடியேன் இவ் ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்தல். அடியேன் என் வாழ்நாளில் பல்லாண்டுகள் அறுபத்து மூவர் புகழை வசனத்தாலும், செய்யுளாலும், இசைப்பாக்களாலும், ஆங்கிலத்தாலும் பேசியும் எழுதியும் வந்துள்ளதன் பயன் காண்பான் போல், சைவ நாயன்மார்களை நினைப்பிக்கும் எண்ணாகிய 63வது ஆண்டுவிழாவில், 63 நாயன்மாரை நினைப்பிக்கும் கபாலீச்சுரத்துத் திருமயிலையில் இப்பெருமையினைப் பெற்றுள்ளேன் போலும்!

இந்த சமாஜம் மறைமலை அடிகள், ஜே. எம். நல்லசாமி பிள்ளை, வி. வி, ரமணன் ஆகியோரால் தொடங்கப் பெற்று, ஏறக்குறைய என் வயதளவுக்கு வளர்ந்து மூவாண்டு அதிகமாகவும் வாழ்ந்துள்ளது. சமாஜத்தின் மணிவிழாவிற்குப் பின் மூன்றாண்டுக் கப்புறம் அடியேனது மணிவிழா நிகழ்கிறது. எனினும் இந்த சமாஜ ஆண்டு விழாவின் தலைவனாக இருக்கும் பேறு பெற்றதன் காரணமாக, யான் எனது 61 வயதினைத் திருப்பி 16 வயதுடையவன் ஆகிவிட்டேன். அதேபோல நான் இவ்வாண்டு அடைந்துள்ளது—சமாஜத்தின் 63ஐத் திருப்பிப் போட்டால் வரும் எண்ணிக்கை 36. சைவ சித்தாந்திகளுக்கு 36ம் 63ம் நிலையாய, உயிர்நாடி போன்ற எண்களாகும். 63 நாயன்மார்களையும், 36 தத்துவங்களையும் முறையே குறிக்கும் எண்கள். ஆதலால் அடியேன் என் 61வது வயதில் 16ஆகிச் சமாஜத்தின் 63வது வயதில் 36ஐக் காண்கிறேன். நான் காண்பது நாததத்துவம். இனி நான தத்துவாதீதப் பிழம்பாகிய பரமசிவத்தைக் காண்டற்கு ஏணியாகவும் தோணியாகவும் இருந்து உதவியருளுவது இச்சமாஜமே தான்.

61ஆம், 63ஆம் பொதுவாக நிற்பது 6 என்ற எண். இந்த எண் 6 என்பது ஆறுவித அத்துவாக்களையும் அவற்

யில் பிணைந்து நிற்கும் இறைவனாகிய அத்வ மூர்த்தியையும் குறிக்கின்றது. இது மானிட உடம்பில் உள்ள ஆறு அத்து வாக்களிலும் குடியிருக்கும் சிவனைக் குறிக்கின்றது. ஆத லால்தான் இச்சமாஜம் தோன்றிய ஆண்டாகிய 1905 என்ப தன் கூட்டு எண் 6 ஆக உளது. அதேபோல இதன் 63வது ஆண்டு விழா நடைபெறும் ஆண்டாகிய 1968 என்பதன் கூட்டு எண்ணும் 6 ஆகவே அமைந்துள்ளது. ஆக,எனது 61 வது ஆண்டு விழாவிற்குரிய 1968ன் கூட்டு எண்ணும் 6 ஆதலால் அடியேனுக்குச் சூக்கும முறையில் மிகத் தீவிர மான நிர்வாண தீக்ஷையின் பிரதான அம்சமும் கிரியையும் ஆகிய அத்வ சோதனையும், அதன் பலனாகிய மலத்துடைப் பும் இவவாண்டு நிகழுகிறது என்றும் யான்கொள்ள இட முண்டு. எனவே, இவ்வளவு ஆண்டுகளாக அடியேனுக்கு இப்பதவியை வழங்காமல் இவ் ஆண்டுதான் அதனை மன முவந்து வழங்க இச்சமாஜத்தார் முன்வந்துள்ளனர் என்றால் அது அவர்கள் செயலன்று. இமைப்போதும் என் நெஞ் சில் நீங்காத இறைவனது அருட்செயலே ஆம்! எதுவுமே பருவத்தால் அன்றிப் பழாதல்லவா?

இத்தருணத்தில், வெகு அண்மையில நம்மை விட்டுப் பிரிந்து நம் சிவபெருமான் திருவடி நிழலை எய்திய நமது மாபெரும் சைவப் பெரியார், பரசமய கோளரி, நாகர்கோவில் திரு. ஆறுமுக நாவலர் அவர்களது பிரிவுக்காக நம் இதயம் கலங்க வருத்தத்தை ஈண்டு முகற்கண் தெரிவித்து, அன்னா ரது ஆன்மாவிற்கு அஞ்சலி செலுத்தி, அது பூரணச் சிவானுபவத்தில் என்றும் திளைத்திருக்குமாறு அருள் செய்ய எம் சிவபெருமான் திருவடிகளை வழுத்துகிறேன். நாவலர் அவர்கள் செய்துள்ள சிவத்தொண்டு ஈடு, இணையற் றது. சரித்திரத்தில் இடம்பெறவல்லது. உடல் அழுத்தம், உயிர் அழுத்தம், உரை அழுத்தம், உணர்வு அழுத்தம் இவற் றோடு, உறுதியோடு நின்று நடமாடும் சிவஞான போதம் ஆகவும், நாஒலிக்கும் மணியோசைக் கோவிலாகவும் வாழ்ந் தும, ஏனைய மக்களை வாழ்வாங்கு வாழவைத்தும், வானுறை

யும் தெய்வத் திருமகனுகச் சென்றுவிட்ட நாவலர் அவர்கட்குச் சைவ உலகம் நல்லதொரு சின்னம் ஏற்படுத்துதல் தலையாய கடமையாகும்.

உரை

சைவசித்தாந்தத்தின் மூப்பொருள் பற்றியும், அவற்றின் நுணுக்கங்கள் பற்றியும் ஏனைய பல சாஸ்திரப் பிரச்னைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்து விளக்குவதுதான் இந்தச் சமாஜத்தின் ஆண்டுவிழாத்தலைவரின் வழக்கமான கடமையும், வழிவழிச் சம்பிரதாயமும் ஆகும். ஆனல் யான் இன்று அவ்வழக்கத்தைப் பின்பற்றப்போவதில்லை.

அவைகளையெல்லாம் குறைந்தது 62 முறைகள் பேசியாகிவிட்டது, கேட்டும் ஆகிவிட்டது. அத்துடன் இதனை யொட்டி நடைபெற இருக்கும் சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர் என் இனிய, பெரிய நண்பரும், சகோதரரும் ஆகிய K. E. அருணுசல முதலியார் அவர்களும், சைவ மங்கையர் மாநாட்டின் தலைவி என் மருமகள், சௌபாக்கியவதி டாக்டர் தாரா நடராஜன் அவர்களும் இவற்றைப்பற்றி நிச்சயம் பேசுவார்கள். ஆதலால் இம்முறையை விடுத்துச் சைவர்களாகிய நாம் நம் சமயத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய ஒருசில தத்துவம் பற்றியும், நாம் நாள் தோறும் நம் வாழ்க்கையில் இன்றியமையாது பின்பற்ற வேண்டிய சில காரியங்கள் பற்றியும்தான், நான் ஈண்டுப் பேச விரும்புகிறேன்.

மானிடரின் உடல்நோய் தீரச் சித்தவைத்திய மருத்துவர் வழங்கும் உபாயங்கள் மூன்று: மணி, மந்திரம், ஔஷதம்; அதேபோன்று, மானிடரின் உயிர்நோய் தீரச் சித்தாந்த மருத்துவம் வழங்கும் உபாயமும் மூன்றேதான்; மணி, மந்திரம், ஔஷதம்.

மணி என்பது உருத்திராக்க மணியைத்தான். மந்திரம் என்பது நமசிவாய என்னும் பஞ்சாட்சரம். ஔஷதம் என்பது திருநீற்றினை. எனவே சைவத்தின் அடிப்படைகளாகிய அக்கமணி, அஞ்செழுத்து, ஆலவாயான் திருநீறு ஆகிய மூன்றினையும் வாழ்க்கையில் பிணைத்து வாழ்பவர்கள் தான் சைவர்கள்—அப்படி இல்லாதவர் சைவர் அல்லாதார்.

திருஞானசம்பந்தர் ஆகிய நால்வர்களும் ஏனையோரும் நமது உடற்பிணி, உயிர்ப்பிணி, பிறவிப்பிணி ஆகியவற்றை ஒருங்கே அழிக்கவல்ல சாதனங்கள் திருநீறும், ஐந்தெழுத்தும் என்று உறுதியாக அறுதியிட்டுப் பாடியும், கண்கூடாக நடந்தும் காட்டிச் சென்றுள்ளனர். அவ்வுண்மையினை இந்நாளிலும்கூட நம் அளவில் உணர்ந்து அனுபவிக்கிறோம்.

பிற சமயத்தாருக்கு நம் சைவத்தின் மேன்மையைப் போதிப்பதோ, வாதிப்பதோ வெறும் பாட்டளவிலும் ஏட்டளவிலும் மட்டுமே இருந்தால் நம் முயற்சி தோல்வியடையும். ஆனால் அவற்றை நம் வீட்டளவிலும், நாட்டளவிலும் நடந்து காட்டுவோமேயானால் அப்போதுதான் நம் சமயம் ராஜாங்கத்தில் அமர்ந்த சைவமாகும். அப்போதுதான் அதில் சேரவாரும் ஜெகத்தீரே என்று அழைப்பதற்குப் பொருளும் உண்டு, போதிய வெற்றியும் கிட்டும்: "The proof of the pudding is in the eating" —"உணவின் உருசியை உண்பதில் காண்க.'

இன்னும் நம் சைவமக்கள் கடைப்பிடிக்கவேண்டிய சில கொள்கைகள் உண்டு.

1. வேதத்திலும் ஆகமத்திலும் நம்பிக்கை வைத்தல்.

2. சிவபெருமான் ஒருவரே பரம்பொருள் என்ற நம்பிக்கை.

3. அகனை வயாட்டியே, தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் ஆகிறான் என்ற நம்பிக்கை.

4. ஆலயத்தையும் ஆலய உருவங்களையும் சிவமாகப் பாவித்தல்.

5. விக்ரக ஆராதனை அல்லது உருவ வழிபாட்டின் தத்துவம் அறிந்து அதில் பரிபூரண நம்பிக்கை வைத்தல்.

6. சிவலிங்கத் தத்துவம், நடராஜர், முருகர், விநாயகர் இவர்களின் தத்துவம் உணர்ந்து நம்பிக்கை வைத்தல்.

7. சிவன் அடியார்களிடத்தில் அளவிலாத, உறுதியான நம்பிக்கையும், பக்தியும் வைத்து அவர்களுக்குத் தம் செல்வங்களை வரையாது வழங்கி வாழவைத்து வாழ்தல்.

"எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்
அப்பொருள தான் ஆளுடையார் அடியார்கள் எனும்
அறிவும்"

—பெ. பு.

8. புலால் உணவை அறவே ஒழித்தல் சிவத்தின் அடியாகப் பிறந்த 'சைவ' என்ற அடைமொழி 'உணவிற்கு' முன் வருவது எவ்வளவு பொருத்தமும், அருத்தமும் உடையதாகும்?

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு"

என்று அறநூலாகிய குறளே ஆணையிடுகிறது. வள்ளுவர், வள்ளலார், காந்தியடிகள் மூவரும் காட்டியவழி புலால் மறுத்தல். காந்தியின் நூற்றாண்டு விழாவும், வள்ளுவரின் இரண்டாயிரத்து ஆண்டு விழாவும் இவ்வாண்டில் அமைதலால், இந்துக்கள் அனைவருமே சைவ உணவை மேற்கொள்ளல் நல்லது. அதனினும் சைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அறவே புலாலை மறுத்தல் இன்றியமையாத கடமையும், ஒழுக்கமும் ஆகும்.

9. பரசமயத்தினரை இகழுதலும், தூற்றுதலும், வெறுத்தலும் ஒழித்தல் வேண்டும். "யாதொரு தெய்வ

கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனர் தாம் வருவர்''-சி. ஞா. சி.

"விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாகும்'
—அப்பர்

10. தீண்டாமையில் நம்பிக்கை கூடாது. அதிலும் சைவததில உள்ள 'பஞ்சமர்' அல்லது 'அரிஜன்' என்பவர் களிடம் தீண்டாமை உணர்ச்சியைப் பிறர் கொள்ளுதல் அறவே கூடாது.

"அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே.'
—அப்பர்

திருநீலகண்ட யாழ்ப்பாணர், நந்தனர், கண்ணப்பர்.

11. பன்னிரு திருமுறைகளைப் படித்தாலும், பல கடவுள்களை வணங்கினாலும், சிவபெருமான் ஒருவரையே தலைவராகக் கோடலும், திருவாசகத்தை நம வேதமாகப் பாடலும் சைவ சமயத்தின் உலகப் புகழுக்கு ஒத்ததாக அமையும்.

12. (1) ஒரே கடவுள் — சிவபிரான்
(2) ஒரே வேதம் — திருவாசகம்
(3) ஒரே குரு — மணிவாசகர்
(4) ஒரே மந்திரம் — ஐந்தெழுத்து
(5) ஒரே அடையாளம் — திருநீறு
} சைவப் பஞ்சசீலம்

இந்தப் பஞ்சசீலம் இன்றே வழக்கத்திற்கு வாராவிடினும் என்றாவது ஒருநாள் வந்தே தீரவேண்டும், வந்தே தீரும். அப்போது நம் சைவம் உலகச் சமயமாக மாறி, "ஞாலம

நின் புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே" என்றும், "அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே" என்றும் நம் திருஞானசம்பந்தப் பெருமான் வாழ்த்திய வாழ்த்தும் வழங்கிய இலட்சியமும் உலகமெங்கும் உருப்பெற்று உலவி நிலவிச் சைவ நீதியையும் ஓங்கச் செய்யும் என்பது உறுதி, உறுதி, உறுதி!!!

சிவத்தொண்டும்—மானிடத்தொண்டும்

விவரமும் விளக்கமும்.

Swamy Vivekananda wrote to Romain Rolland:

"Some conceive of distinction between the realisation of the divinity in man and the consciousness of universal suffering with regard to motives for service. It seems to me that these are merely two aspects of the same state of mind and not two different states. It is only by realising the inherent divinity of man that we can truly feel the depth of his misery, for only the state of man's spiritual bondage and deprivation of the divine perfection and bliss becomes vivid to our consciousness It is the painful consciousness of the contrast between the Divinity within man and his present ignorance of it and consequent suffering that goad the heart to his service. Without the realisation of the spirit within oneself and in others, true sympathy, love and service are not possible. This is why Sri Ramakrishna wanted his disciples to attain self-realisation before they could devote themselves profitably to the service of man-kind."

Another way for Self-Realisation:

Ramakrishna: "Jiva is Siva. Why kindness to living beings? Worship them as God. Kindness stimulates arrogant superiority. Man has a right, only to seve and worship as God."

Vivekananda :

"From the highest Brahman to the tiniest atom, abides the same God. Dedicate thyself to their service. God exists in varied forms before thee. Where dost thou seek him? He serveth God best who loveth best His creatures."

Again Vivekananda :

"Are not all the poor, the miserable, the weak our Gods? Worship them first. He who sees Siva in them really worships Siva; and if he sees Siva only in the image, his worship is preliminary. May I be born again and again and suffer thousands of miseries so that I may worship the only God that exsists the only God that I believe in.

One questson may be asked :

Is it possible for ordinary mortals to serve suffering humanity in the true sprit of worship without first realising the inherent divinity in them? It is true that he who has seen God will live for all and that without the realisation of the spirit within oneself and in others real service is not possible. But that must not deter us from practising the ideal. Before self-realisation we ought to keep constantly in view the revelations of the scriptures and the spiritual experiences of the great Seers, who have realised the truth, and try and follow them as best as we can. Constant practice in the spirit of worship will enable the Server to realise the Self in the long run."

Goal of Life Divine :

"Man is man so long as he is struggling to rise above nature; and this nature is both internal and external. It is good and very grand to conquer external nature but grander still to conquer internal nature. It is grand and good to know the laws that govern the stars and planets; it is infinitely grander and better to know the laws that govern the passions, the feelings, the will of mankind."

"Man is higher than all animals, than all angels; none is greater than man. Man alone attains perfection, not even the Devas, "—*Vivek*

Conclusion :

"I see in my mind's eye the future perfect India, rising out of this chaos and strife, glorious and invincible with the Vedanta brain and Islamic body," and may we also add the Buddha's heart, a Christ's charity and a Manickavachakar's piety?

Need for Foreign Propaganda :

1. "You may not understand why a Sannyasin should be in America; but it was necessary. Because the only claim you have to be recognised is your religion and good specimen of our religious men are required to be sent abroad. to give other nations an idea that India is not dead."

2. "Some representative men must come out of India and go to all nations of the earth to show at least that you are not savages. You may not feel the necessity for it from your Indian home; but believe me, much depends upon that for your nation. And a Sannyasin who has no idea of doing good to his fellows is a brute, not a Sannyasin."

3. "We must mix. therefore, with all the races of the earth. And every Hindu that goes out to travel in foreign parts renders more benifit to his country that hundreds of men who are bundles of superstitions and selfishness and whose one aim in life seems to be like that of the dog in the manger."

4. "........the money required for these works would have to come from the West. And for that reson our religion should be preached in Europe and America"

5. "If an Indian woman in Indian dress preach the religion which fell from the lips of the Rishis of India—I see a prophetic Vision—there will rise a great wave which will inundate the whole Western world. Will there be no woman in the land of Maitraiye, Khana, Lilavathi, Savitri and Ubhayabhavathi who will venture to do this? The Lord knows!"

6. "England we shall conquer. England we shall possess through the power of spirituality. Our conquerors must be made Devas by the power of spirituality...Conquest of England, Europe and America—this shoul be our one supreme Mantram. At present in it iies the well-being of this country. Expansion is the sign of life and we must spread over the world with our spiritual ideals. Alas! this frame is poor; moreover, the physique of a Bengali......but there is the hope."

"A kindred spirit is or will be born out of the limitless Time and the populous earth to accomplish this work."

7. "If you could send and maintain for a few years a dozen well-educated strong men to preach in Europe and America, you would do immense service to India both morally and politically."

8. "It has been for the good of India that religious preaching in the West has been and will be done. It has ever been my conviction that we shall not be able to rise unless the Western people come to our help. In this country no appreciation of merit can yet be found no financial strength and what is the most beautiful of all, there is not a bit of practicallity well being."

திருச்சிற்றம்பலம்.

ரௌரவாகமமும் சிவஞானபோதமும்

ஆசிரியர்

வடமொழி சிவஞான போதச் சுலோகங்களைப்பற்றி மீண்டும் சில கருத்துக்களை இங்குக் கூற விரும்புகிறோம். முன்னமே இதுபற்றி இருமுறை சித்தாந்தத்தில் எழுதி இருக்கிறோம். மீண்டும் இங்கு எழுதுவது, உண்மைச் செய்திகளைச் சைவமக்கள் நன்கு அறிய வேண்டும் என்ற கருத்தினாலேயே அல்லாமல், வடமொழி நூலைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அன்று, ஆங்கில சைவ சித்தாந்த இதழ்களில் சைவபத்ததி, சைவாகமங்கள் என்ற தலைப்புக்களில் யாம் எழுதிய கட்டுரைகள் எமக்கு வடமொழி யினிடத்து உள்ள ஈடுபாட்டை நன்கு புலப்படுத்தும்.

தமிழ்ச் சிவஞான போதத்துமூலம், வடமொழியில் மூலாகமங்களில் ஒன்றாகிய ரௌரவாகமப்-பாசவிமோசன படலத்தில் உள்ள பன்னிரண்டு சுலோகங்கள் என்று நெடுங் காலமாகச் சொல்லப்பட்டு வந்தது. 'இது பிழையான கருத்து, மெய்கண்டார் நூலே மூலமானது. இதைப் பார்த்து மொழிபெயர்த்த பாடல்களே ரௌரவாகமச் சுலோகங்கள்' என்பதைப் பலர் பலமுறை நன்கு விளக்கிக் காட்டி யிருக்கிறார்கள்.

இந்த ரௌரவாகமத்தை 1961இல் புதுச் சேரியில் உள்ள பிரெஞ்சு நாட்டு இந்தியக் கலைக்கழகத்தார் நன்கு ஆராய்ந்து வெளியிட்டு இருக்கிறார்கள். இதுமட்டுமன்றி, அஜிதாகமம் முதல்பாகம், மிருகேந்திர ஆகமம், சோம சம்பு பத்ததி, காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஆகிய நூல்களையும் வெளியிட்டு இருக்கிறார்கள். எல்லா நூல் களுக்கும் மிகப் பலவான மூல ஏடுகளை வைத்து ஒப்பு நோக்கி, பாடபேதங்களைக் குறிப்பிட்டு, விரிவான முன் னுரைகள், குறிப்புரை, ஏராளமான படங்கள் ஆகிய அம்

சங்களோடு, மிக நன்றாகச் செய்திருக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் செய்துள்ள சைவநூல் வெளியீட்டுக்குச் சைவ உலகம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இங்குக் குறிப்பிட்டுள்ள ரௌரவாகமமானது, முதல் பகுதி மட்டும், பக்கம் 22+224. இதனுள் அடங்கியவை வித்தியா பாதம் என்கிற ஞான பாதமும், கிரியா பாதமும் மட்டுமே.

மற்ற இரு பாதங்களும் இரண்டு மூன்றும் பகுதிகளாக அச்சுக்குத் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளன; சரியான அச்சகம் அமையப் பெறாமையால், இன்னும் அச்சுக்குக் கொடுக்கப்படவில்லை.

அச்சிட்ட ரௌரவாகமம் புத்தகத்தில், ஆகமங்களைப் பற்றிய விரிவான அட்டவணை, 38 கலைகளைக் குறித்துப் பதின்மூன்று ஆகமங்களும, பத்ததிகளும் கூறும் வைப்பு முறை பற்றிய அட்டவணை, எடைகளைக் குறித்துப் பதினொரு ஆகமங்களும் பிற நூல்களும் கூறும் அளவு அட்டவணை, அக்கினியினுடைய ஏழு நா பற்றிய விரிவான அட்டவணை, கலச அட்டவணை ஆகியனவும பத்துக் குண்டங்களின் படங்களும், கலசஸ்தபனங்களின் படங்கள் ஐந்தும் சேர்க்கப்பட்டுள்ளன. இபபதிப்புக்குப் பயன்பட்டுள்ள ஏடுகள் ஆறு; இரண்டு ஓலை, மற்றவை காகிதம்.

இவ்வாகமத்தை அச்சிட்டவர்கள் வித்தியாபாதத்தில் நான்கு படலங்களும் கிரியா பாதத்தில் 26 படலங்களும் முதலில் அச்சிட்டு முடித்தார்கள். அச்சிட்ட பின்னர், ரௌரவசூத்திர சங்கிரகம என்ற ஓர் ஏடு மைசூர் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கிடைத்து, அதில் முற்கூறிய வித்தியா பாதம் நான்காம் படலத்தில், இறுதிப் பன்னிரண்டு பாடல்களும், ஐந்து முதல் பத்து வரையில் உள்ள மிந்திய படலங்களும் கிடைத்துச் சேர்த்து அச்சிட்டு இருக்கிறார்கள். அனுபந்தமாக சௌரபூஜா விதி என்ற பகுதி (101 பாடல்)

சேர்க்கப்பட்டுள்ளது. இப்பாதத்தில் பின்னும் பகுதிகள் உள்ளனவா என்று விளங்கவில்லை.

ருரு என்ற சிஷிக்கு உபதேசம் செய்யப்பட்டமையால் இவ்வாகமம் ரௌரவம் எனப் பெயர் பெற்றது.

வித்தியாபாதம் என்னும் ஞான பாதத்தின் படலத் தலைப்புகள் பின்வருவன; இவற்றைப் பார்க்கும் பொழுது, பதி பசு பாசம் கூறிப் பாச நீக்கமும் வீடு பேறும் ஆகிய சமய தத்துவ முடிவு உரைக்கிற சுலோகங்கள் இதனுள் இடம் பெற முடியாது என்பது தெளிவாகப் புலப்படும்.

1. முகவுரை, சிருட்டிக்கிரமம், 2. சிவ தத்துவங்கள், 3. தந்திராவதாரம், 4. அத்துவா விதிகள், 5. முத்திராலக்ஷணம், 6. பஞ்சப் பிரம்மகலாவிதி, 7. தாரணு விதி, 8. தீட்சை வகைகள். 9. ஆத்ம சங்கிராந்தி, 10. மந்திரார்த்த வர்ணனம்.

இவ்வாகமங்களை எல்லாம் பரிசோதித்து ஒப்பு நோக்கிக் குறிப்பு எழுதித் திருத்தமாக அச்சிட்டவர், என். ஆர். பட் என்ற பெயருடைய கன்னட சாஸ்திரிகள். இவ்வளவு ஆராய்ச்சி உடைய இப்பண்டிதரைக் காண வேண்டும் என்ற எண்ணத்தோடு சமீபத்தில் புதுச்சேரி சென்று இவரைச் சிறிது நேரம் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தோம். இவர் ஆண்டில் இளைஞராகவே இருந்தார். முன்னர் அடையாற்றில் நூல் பரிசோதகராக இருந்தவர். இவ்வேலைக்காகப் புதுச்சேரிக் கழகத்தினர் இங்கு அழைத்து வந்தார்கள். வந்ததும், "எவ்வகையான ஆராய்ச்சி வேலை செய்யலாம்" என்று அவர்கள் இவரைக் கேட்டபொழுது, இவர் சொன்னர், "இந்தியர்களும் ஐரோப்பியர்களும் வேதங்களை மிகுதியாக ஆராய்ந்து இருக்கின்றார்கள். ஆகமங்களில் இதுவரை யாரும் பிரவேசிக்கவில்லை. ஆகவே, இவற்றை மேற்கொண்டால் அதிக வேலை செய்வதற்கு இடம் இருப்பதோடு, இவ் வேலையின் மூலம் பிரெஞ்சுக் கழகத்திற்கும் நிலைத்த புகழ்

உண்டாகும்.'' இதன் மேல் ஆகம ஆராய்ச்சி வேலை தொடக்கமாயிற்று.

இவர்கள் முற்கூறிய ஆகமங்களை அச்சிட்டு இருப்பதோடு, அஜிதம் பிற்பகுதிகளையும் அச்சிட்டு வருகின்றார்கள். அன்றி 23 ஆகமங்கள் வரையில் இவர்கள் சேகரித்துப் பிரதி செய்து வைத்திருக்கிறார்கள். ஏனைய கிடைக்கவில்லை. யாரேனும் இலவசமாகக் கொடுத்தாலும், விலைக்குக் கொடுத்தாலும், கடனுககுக் கொடுத்தாலும், பெற்றுக் கொள்கிறார்கள். "யாரேனும் காட்டினாலும் கூடப்போதும். அவர்கள் வீட்டுத் திண்ணையிலேயே உட்கார்ந்துகொண்டு பிரதி செய்துகொள்ள ஏற்பாடு செய்கிறோம்'' என்று சாஸ்திரிகள் கூறினர்.

பத்து வருஷங்களுக்கு மேலாக இத்துறையில் இவர் உழைத்து இருக்கின்றமையால் பல செய்திகள் இவருக்கு நன்கு விளக்கமாகியுள்ளன. ஆகமங்களைக் குறித்து எவ்விதத் தெளிவும் இல்லாத நிலையில் இவர் கருத்துக்கள் சைவ மக்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"ஆதியில் வேதங்களும் ஆகமங்களுமே சுருதி எனப் பட்டன. இரண்டும் ஆசிரியர் மாணுக்களுக்குப் போதிக்க, செவி வழியாகவே வழங்கி வந்தன. வேததோடு ஒத்த வலிமை ஆகம வாக்கியத்திற்கும் இருந்தது. குல்லூக பட்டர் போன்றவர் ஆகமங்களை ஒப்புக் கொள்ளுகின்றனர். ஆனால் வேத நிகமம் என்றும் ஆகமம் தந்திரம என்றும் நிகண்டுகளில் பெயர் வேற்றுமை ஏற்பட்டு விட்டது. ஒற்றுமை 11 ஆம் நூற்றாண்டுவரை இருந்தது. இரண்டும் வெவ்வேறு என்ற வேற்றுமை அதன்பிறகே விளைந்தது.

"ஆகமங்கள் யாவும் கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னே தோன்றியவை. ஒருகால் அவை இன்று நாம்

பார்க்கிற வடிவத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம். காலத்தால் மாறுதல் ஏற்படுதல் இயல்பு. மேலும், நெடுங்காலம் ஆகமங்கள் வேதங்கள் போல எழுதிவைக்கப் படாமல் இருந்தபடியால் கேள்வியால் மட்டும் இருந்தவற்றுள் மாறுதல் ஏற்படுவது இயல்பே. அன்றியும், மூலத்தில் காலத்திற் கேற்ற மாறுதல் செய்யப் பெறுதலும் கூடும். இவை யாவும் உண்மையாயினும், இவ்வாகமங்கள் முற்கூறிய மிகப் பழங்காலத்திற்குரியன என்பது மிகத் தெளிவு.

ஆகமங்கள் கூறுகின்ற தத்துவக் கருத்துக்கள் தூய்மை யானவை. பின்வந்த சங்காருடைய கருத்துக்கள் அவற்றுள் இடம் பெறவில்லை. சங்காருடைய தத்துவக் கொள்கையின வேகம் மெய்கண்டார் வரையில்கூட எட்டியிருக்கிறது. ஆனல் ஆகமங்களில் இவற்றிற்கு இடம் இல்லை; காரணம் ஆகமங்களின் பழமையே.

அடுத்தபடியாக, மெய்கண்டாருடைய சிவஞானபோத சூத்திரங்கள் நியாய சாஸ்திரிக முறைப்படி அமைந்தவை. ஆனல், வடமொழி மூலம் என்று சொல்லுகின்ற பாச விமோசன படலத்தின் சுலோகங்கள் இந்த முறையில் அமையவில்லை. மேலும் சுலோகங்கள் ஆகமத்துக்குரிய மொழியில் அமையவில்லை. ரௌரவாகமம் இன்று கிடைத்த அச்சிட்ட பகுதியிலும் அச்சிடத் தயாராக உள்ள பகுதியிலும் இந்த சுலோகங்கள் இல்லை. எனினும் கிடைத்த ரௌரவாகமந்தான முழுமையான ஆகமம் என்று கொள்ள முடியாது. கிடைக்காத பகுதிகள் பலவும் இருக்கலாம்; அவற்றுள் இந்த சுலோகங்கள் இல்லை என்று இப்போது சொல்வதற்கில்லை.

ஆயினும், மேற்குறித்த காரணங்களால், அதாவது நடை, பொருள் அமைப்பு முதலிய தன்மைகளால், வடமொழிச் சுலோகங்கள் தமிழுக்கு மூலமல்ல என்று திட்ட

மாய்ச் சொல்லலாம். அதுமட்டுமல்ல; இவை தமிழிலிருந்து பெயர்க்கப்பட்டன என்றும் சொல்ல முடியும்.

"மற்றொரு கருத்து இங்கு சொல்லத் தக்கது. ரௌரவாகம சூத்திரங்களில் மூன்று மட்டும் சுவாயம்புவ சங்கிரகம் என்ற ஓர் ஏட்டில் காணப்படுகின்றன. மூல சுவாயம்புவத்தில் இவை இல்லை. சங்கிரகம் மிகவும் பிற்காலத்தில் செய்யப்பட்டது. பிற்காலத்தில் ஒருவர் இச்சூத்திரங்களை எடுத்து இவற்றோடு வேறு சில பழைய பாடல்களையும் சேர்த்து, பாசவிமோசன படலச் சூத்திரங்கள் என்று பெயரிட்டு விட்டார் போலும்."

"திருமூலர் மூன்றும் நூற்றாண்டில் இருந்திருக்கலாம். அவர் வேதம சிவாகமம இரண்டையும் ஒற்றுமைப்படுத்த எண்ணிய ஒருபெரும் ஞானி.

"இந்தியாவினுடைய கலை வரலாற்றுக்கும் நாகரிகத்துக்கும் தத்துவக் கொள்கைகள் அனைத்துக்கும் மூலமாய் உள்ளவை சிவாகமங்கள். இக்கருத்துக்குப் போதிய சான்றுகள் இப்பொழுதுள்ள ஆகமங்களில் கிடைக்கின்றன. எனினும் பிற ஆகமங்களும் கிடைத்து நன்முறையில் யாவும் வெளிவந்தபின்னரே இக்கருத்தை நன்கு நிலைநாட்ட முடியும்."

வேறின்மை

பொன். சண்முகன், காஞ்சிபுரம்.

அந்நிய நாத்தி (சிவஞான போதம் சூத்திரம் 2 ஆம் அதிகரணம் 1 ஏது வாக்கியம), அந்நியமின்மை (சூ,த்தி–8), அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றல் (சூ–8–அதி–!–ஏது), அந்நியமிலாமை அரற்கொன்றுணர்வின்றும் அந்நியமிலானசத்தைக் காண்குவனேல்.

(சூ-7–அதி–1–வெ–1).

அந்நியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான் (சூ-11-அதி-2-எது வாக்கியம்) அதுவும் நீயும் என்று இருமை கண்டு வேறதின்மை கருதலால் நாடரிய நாயகன் (பரபட்சம் மாயாவாதி மதம் மறுதலை 18), சோக மெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி (சித்தி. சுபக். 298) வேறின்மை கைகண்டார் உள்ளத்திங்கண் (இருபா இருபது 1) வேறு என்று இருந்த என்னை யான்பெற, வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ (இருபா 14). அன்னியம் இலாமையானும் அறிவினுள் நிற்றலானும் (சித்தி-247) என்னும் மெய்கண்ட நூற்சான்றுகளான் வேறின்மை என்னும் பொருளே கிடைக்கப் பெறுகின்றோம். அநந்நிய மாகக் காண்பன் (சித்தி 245) இரண்டும் அணைந்தாலும் ஒன்றாகாது அநந்நியமாயிருக்கும் (சித்தி-320) என்னும் இடங்களில் வேறன்மை என்னும் பொருள் கொள்ளாலும் கூடும் என்பார் மூற்காட்டிய இடங்களில் வேறன்மை என்று பொருள் கொள்ளல மாறுபடுவதாகும். மாபாடியத்தில் நப்பிரத்யயத்திற்குப் பொருள் விளக்கம் எழுதிய இடத்தில் அப்பிராமணன் என்பதன் பொருளை ஒக்க அத்துவிதம் என்பதற்கு அன்மைப் பொருளே கொள்ளல் வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கின்றது.

ஒன்று-ஒருமை; இரண்டு-இருமை; மூன்று-மும்மை முதலியனவாக எண்ணுப் பெயர்களில் முறையே பண்பியையும் பண்பையும் குறிப்பனவாய் உள்ளன. அத்துவித மென்ற சொல்லில் இரண்டு என்னும் பண்பியைக் குறிக்காமல் பண்பையே குறிப்பது துவிதம் என்பது. சிவனும் சீவனும் உற்ற கலப்பில் பண்பியால் இரண்டாயும் பண்பால் இருமை இல்லை. இருமை இன்மையால் ஒருமை உண்டென்பது தெள்ளிதே. அதனால் நம்முன்னோர் அத்துவிதத்தை ஒருமை என்னும் சொல்லால் குறித்தனர். உமாபதி சிவம் அருளிய ஞான பூசாவிதியுள் 'கலந்தொருமை' (செய்-1), 'ஒருமை திரிந்ததாகில்' (4) என்பவற்றால் அறியலாம். இரண்டு என்னும் பண்பியைக் குறிக்கும் சொல்லை

ஆண்டு அத்துவித நிலையை உணர்த்துங்கால் அன்மைச் சொல்லே கொள்ளப்படும். சீவனும் சிவனும் ஆகிய இரு பொருள் இருத்தலால் இரண்டில்லை எனல் ஆகாது. இரண்டல்ல, இரண்டல்லன் என அன்மைச் சொல்லே ஆளப்படும். 'அறிய இரண்டல்லன் ஆங்கறிவு தன்னால், அறியப்படான் அறிவின் உள்ளான்-அறிவுக்குக் காட்டாகி நின்றான்; 'அது என்னும் ஒன்றன்று; 'அதுவன்றி அது என்னும் அறி அறிவும் வேறே உண்டே'. 'அது என்றறிய இரண்டல்லன், ஆங்கு அறிவுள் நிற்றல் அறியும் அறிவே சிவமும் ஆம், என்பவற்றால் அன்மைச் சொல் ஆட்சிக்குரிய நிலை புலப்படும்.

சைவசித்தாந்த மகாசமாஜ 63ஆம் ஆண்டு விழா

(கொ. நீ. சிங்காரவேலு)

நமது சமாஜத்தின் 63ஆம் ஆண்டுவிழா, 27, 28, 29-12-68 ஆகிய நாட்களில் சென்னையில் மயிலாப்பூர் கற்பகாம்பாள் கபாலீச்சுரர் திருக்கல்யாண மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. சமாஜச் சரித்திரத்தில் புகழ் பெற்ற சில ஆண்டுவிழாக்களின் வரிசையில் வைத்து எண்ணக்கூடிய வகையில் இவ்வாண்டு விழா அமைந்திருந்தது என்பது இவ்விழாவில் கலந்துகொண்ட எல்லோருடைய ஒருமித்த கருத்து.

ஆண்டுவிழா நடைபெற்ற மண்டபம் ஸ்ரீகபாலீச்சுரர் திருக்கோயிலுக்கு அருகில் உள்ளது. அம்மண்டபம் பெரியதாகவும் கவர்ச்சியுள்ளதாகவும், விசாலமான பேச்சுமேடை அமைந்ததாகவும் உள்ளது. பேச்சு மேடையில் கூத்தப் பிரானின் திரு உருவச்சிலை அமைக்கப்பட்டது மிகவும் பொருத்தமாக இருந்தது. அப்பிரானின் தலைமையிலும் அவர் அருளாட்சியின் கீழும் சமாஜ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை அத்திரு உருவம் எடுத்துக் காட்டியது. அம்மண்டபத்தில் மின் விளக்குகளும் ஒலிபெருக்கியும் மிகச் சிறந்த முறையில்

அமைக்கப்பட்டிருந்தன. சுருங்கக்கூறின், சமாஜ விழா நடத்துவதற்கு தெய்வீகச் சூழ்நிலை அமைந்த மற்றொரு சிறந்த மண்டபம் சென்னையில் காணபதரிது.

சமாஜ விழாவிற்கு வந்திருந்த உறுப்பினர்களுக்கு உண்டியும் உறையுளும் மயிலையில் தெற்கு மாடவீதியில் எண் 16 உள்ள கல்யாண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. இம்மண்டபம் விழா நடந்த இடத்திற்கு மிகவும் அருகில் விசாலமான இடமுள்ளதாகவும் அமைந்திருந்தது யாவருக்கும் மன நிறைவு தந்தது.

முதல்நாள் நிகழ்ச்சிகள் :—

முதல்நாள் காலை ஸ்ரீ கபாலீச்சுரர் கோவிலில் வழிபாடு நடைபெற்றது, திருக்கோயிலில் பொன்னுடை அணிவித்தல் முதலிய சிறப்புக்களை அந்தந்த நாள் விழாத் தலைவர்க்குச் செய்தனர். அங்கிருந்து விழாத் தலைவர்கள், கோவில் ஓதுவார்களும், கபாலீச்சுரர் தேவார பாடசாலை மாணவ மாணவிகளும் தேவார இன்னிசை பாட, தொண்டர் குழாம் சூழ, ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். இவ்வாறே மூன்று நாட்களும் வழிபாடும் ஊர்வலமும் நடைபெற்றன,

முதல்நாள் காலை இந்துசமய அறநிலைய ஆணையாளர் திரு. ஆ. இராதா கிருஷ்ணன், எம். ஏ., பி எல்., அவர்கள் இடபக் கொடியை ஏற்றிவைத்தார். அவர் வேறு அலுவல் காரணமாக அவசரமாகச் செல்லவேண்டியிருந்ததால் அவரது சொற்பொழிவை அறநிலையத் துணை ஆணையாளர் திரு. கே. இராஜா அவர்கள் வாசித்தார்கள். அவர் சொற்பொழிவின் சுருக்கம் அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

பின்னர், சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி., அவர்களும் பத்ம பூஷணம் திரு டி. எஸ். இராமசுவாமி ஐயர், பி ஏ., பி. எல்., அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். சமயத் தொண்டிலும் சமூகத் தொண்டிலும் தங்களை இடையருது ஈடுபடுத்திக்கொண்டு எண்பது ஆண்டுகள் நிறைவு பெற்றும தொண்டில் ஆர்வம் குன்றுத இவ்விருபெரும் பக்தர்கள மாநாட்டிற்கு ஆசி கூறியதை யாவரும் போற்றினர். இறைவன் அருளால் இவர்கள் நீடூழி வாழ்க!

பின்னர், வரவேற்புக் குழுத் தலைவர் திரு அய்யா சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். இவர் ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவிலின் அறங்காவலர் குழுவின் தலைவர். சமாஜத்திடம் மிகுந்த அன்பும் ஈடுபாடும் உடையவர். கோவிலின் நிகழ்ச்சிகளிலெல்லாம் சமாஜத்தை ஈடுபடுத்தி சமாஜத்திற்குப் பலவகையில் உதவி புரிந்து வருகிறவர். இவர் சென்னை வாசிகளின் சார்பாக விழாத் தலைவர்களையும் விழாவிற்கு வந்திருந்தவர்களையும் பரிவோடு வரவேற்றார்.

பின்னர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திறப்புரை நிகழ்த்தினார்கள். அவருடைய பேச்சு அவருக்கே உரிய தனிப் பாங்கில, காலத்திற்கு ஏற்ற முறையில், புத்தம் புதிய கருத்துக்களும், பழைய நெறிக்குப் புதிய விளக்கங்களும் கொண்டதாகச் சிந்தனைக்கு விருந்தாகவும், செயல் முறைக்கு உகந்ததாகவும அமைந்திருந்தது. அவர் தமது சொற்பொழிவு முழுவதும் அச்சிட்டு தனி வெளியீடாக வழங்கியது போற்றுதற்குரியது.

பின்னர், அருள்திரு ஞானியார் அடிகளார் திரு உருவப் படத்தை சமாஜத்தோடு மிகத் தொடர்புடைய ராவ்சாகிப் திரு நல். முருகேச முதலியார் பி. ஏ., அவர்களும், அருள்திரு மறைமலையடிகள் திருவுருவப் படத்தைத் தலைமைச் செயலக சட்டதுறை அரசுச் செயலாளர் திரு தி. சு. இராமலிங்கம், எம. ஏ., பி. எல்., அவர்களும் திறந்துவைத்தனர். திறந்து வைத்த இவர்கள் அப்பெரியார்களுடைய பெருமைகளைப் பெரிதும் பாராட்டிப் பேசினர் திரு. தி. சு. இராமலிங்கம் அவர்கள் முன்னாள் ஜஸ்டிஸ்கட்சி அமைச்சர்திரு சிவஞானம் பிள்ளை அவர்களின் திருமகனர் என்பதும் சைவத்திலும் தமிழிலும் மிக ஈடுபாடு உடையவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இத்திருவுருவப் படங்களைத் தந்து உதவியவர் சமாஜச் செயற்குழு உறுப்பினரான திரு வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள். அவர் தம் சொந்தச் செலவில் இப்படங்களைச் செய்து சமாஜத்திற்கு நன்கொடையாக உதவியதுமல்லாமல், சமாஜக் கட்டட நிதிக்காக மறைமலையடிகள் பெயரால் 100 ரூபாய் நன்கொடையாகத் தநதனர். அவருக்கு சமாஜம், உளங்கனிந்த நன்றி செலுத்துவதோடு அவர்தம்

கொடைச்செயலை மற்றவர்களும் பின்பற்றுவார்களென்று நம்புகிறது.

பின்னர் தாம்பரம் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் திரு க. வடிவேலாயுதம் எம். ஏ., அவர்கள் சமாஜ ஆண்டு அறிக்கையை வாசித்தார்கள். அறிக்கை இவ்விதழோடு இணைக்கப்பெற்றுள்ளது.

திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம். ஏ., அவர்கள் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்கள். இந்தியத் துணைத்தலைவர் திரு வி. வி. கிரி, மாநில ஆளுநர் திரு உச்செயல் சிங், மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், திருவண்ணாமலை ஈசானிய மடம் இராமநாத சுவாமிகள். உயர்நீதிபதி திரு. ஆர். சதாசிவம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு சி, சுப்பிரமணியம், திரு. கிருபானந்த வாரியார், டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம், திருமதி ருக்மணி தேவி அருண்டேல், கி. ஆ பெ. விசுவநாதன், கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன், நீதிபதி திரு மா. சே. சாரங்கபாணி முதலியார் ஆகியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் தவத்திரு இராமசாமி அடிகளும் நன்கொடை அனுப்பியுள்ளனர்.

பின்னர், யாவரும் எதிர்பார்த்திருந்த தலைமையுரை திரு வாசகமணி திரு கே எம். பாலசுப்பிரமணியம் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. அவருடைய பேச்சு வழக்கம்போல விறுவிறுப்பாகவும், அழுத்தம் திருத்தமாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தது. அவ்வுரையில் சைவ மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கைகளை வகுத்துக் கூறியுள்ளார். மேலும் சைவர்களுக்கு ஒரே கடவுள், சிவபெருமான்; ஒரே வேதம், திருவாசகம்; ஒரே குரு, மணிவாசகர் ஒரே மந்திரம், ஐந்தெழுத்து; ஒரே அடையாளம், திருநீறு என்று கூறி இவைதாம் சைவப் பஞ்சசீலம் என்றும் கூறினர். அவருடைய சொற்பொழிவு அச்சிடப்பட்டு யாவருக்கும் வழங்கப்பெற்றது. இச்சொற்பொழிவினை இவ்விதழில் வேறு இடத்தில் காண்க.

இறைவணக்கத்துடன் காலை நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

27-12-68 மாலை திருவாசகமணி அவர்களின் தலைமையில் சைவர் மாநாடு தொடங்கப்பெற்றது. உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு திரு ஆர். சதாசிவம் அவர்கள் விழா மலரை வெளியிட்டார். விழா மலர் பல அறிஞர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய பல கட்டுரைகளைத் தாங்கியுள்ளது. அதன விலை ரூ. ஒன்றுதான், நீதிபதி அவர்கள் சமாஜத்தின் தொண்டைப்போற்றி மலரை வாங்கிப் பயன்பெறுவதோடு சமாஜத்தையும் ஆதரிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

பின்னர் சமாஜ வெளியீடுகளாகிய திருவாசகத்தையும், 'Saiva Cult and Heritage' என்ற ஆங்கில நூலையும் முறையே கழகப் புலவர் திரு ப. ஆராமநாதப் பிள்ளை அவர்களும், குற்ற விசாரணை மாநகரத் தலைமை நீதிபதி திரு எம். சியாமதாஸ் அவர்களும் வெளியிட்டனர், பின்னர் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினர். திருவாசக நூல் காரைக்குடி வருமானவரி ஆலோசகர் திரு எஸ். நாராயணன் செட்டியார் அவர்கள் உதவிய ரூ. 1400/–ஐக்கொண்டு அச்சிடப்பெற்றது. அன்னாரின் கொடைத்திறனை சமாஜம் பெரிதும் பாராட்டி அவர் தொண்டு மேலும் சிறக்க அவர் நீடூழி வாழ்க என்று இறைவனை வழுத்துகின்றது. இந்நூல் 'சித்தாந்த' இதழின் ஆசிரியரான திரு எம். அருணசலம் அவர்களால் ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கித் திருத்தப்பதிப்பாக வெளியிடப்பட்டுளளது. அவருடைய பேருழைப்பையும் ஆராய்ச்சித்திறனையும் சமாஜம் பாராட்டுகிறது. இந்நூலின் விலை ரூபாய் ஒன்று, 'Saiva Cult and Heritage' என்ற ஆங்கில நூல் சமாஜத் தலைவர் திரு கோ, மு. முத்துசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ்., (ஓய்வு) அவர்களால் எழுதப்பெற்றது. இதன் விலை 75 காசுகள்,

பின்னர், முன்னரே அறிவித்த நிகழ்ச்சி நிரலில் சிறிது மாற்றம் செய்யப்பட்டது. அதாவது இச்சமயத்தில் திருவாசகமணி அவர்களின் மணிவிழாவை சமாஜம் கொண்டாடிற்று. சமாஜத் தலைவர் திரு கோ. மு. முத்துசாமிப் பிள்ளை அவர்கள் அவருக்குப் பாராட்டுரை வாசித்துத் தந்தனர். அன்னாருக்குச் சமாஜச் சார்பில் பொன்னாடை போர்த்தப் பெற்றது. பழநி திரு க. அரங்கசாமி முதலியார் அவர்கள் திருவாசகமணிக்கு இப்பொன்னாடையைப் போர்த்தி சில பாராட்டுரைகள் புகன்றார், உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு திரு ஆர். சதாசிவம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருச்சி

செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர் மேஸ்கரனஸ் ஆகியோர் திருவாசகமணியின் தொண்டைப் போற்றி ஆசி கூறினர்.

இந்நிகழ்ச்சி நடந்தபின்னர், சிறந்த நாவலாசிரியர் திரு அகிலன் அவர்கள், 'அறநெறியும் நடைமுறையும்' என்பது பற்றியும், கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் திரு பெ. திருஞானசம்பந்தம், எம்.ஏ., எல் டி., அவர்கள் ''சைவத்தின் மூல இலக்கியங்கள்'' என்பது பற்றியும், பல்கலைக் கழகத் தத்துவப் பேராசிரியர் டாக்டர் திரு வ. ஆ. தேவசேனபதி, எம். ஏ., பி.எச்.டி. அவர்கள் 'இந்தியப் பண்பாட்டில் சைவ சித்தாந்தத்தின் பங்கு' என்பது பற்றியும் தமிழ்நாடு தெய்வீகப் பேரவைச் செயலாளர் திரு அர்ச்சுனன், பி. ஏ. அவர்கள் 'சைவ சித்தாந்த விளக்கம்! என்பது பற்றியும் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட பொருள்களைப் பற்றி விரித்துரைக்க அவர்களுக்குப் போதிய காலம் கொடுக்கப்படவில்லையே என்று பலர் வருந்தினர். இதற்காகச் சமாஜம் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறது. அவர்கள் எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றிக் கட்டுரைகள் எழுதியனுப்பினால் சமாஜம் நன்றியோடு 'சித்தாந்தம்' இதழில் வெளியிடும்.

தலைவர் முடிவுரையுடனும், இறைவணக்கத்துடனும் முதல்நாள் நிகழ்ச்சி நிறைவுற்றது.

இரண்டாம்நாள் நிகழ்ச்சி ;–

இரண்டாம்நாள் வழக்கம்போல் கோவில் வழிபாடும், ஊர்வலமும் முடிந்தபின் காலை 9 மணிக்கு சைவ மங்கையர் மாநாடு தொடங்கிற்று. இம்மாநாட்டிறகு திரு ஔவை. துரைசாமிப் பிள்ளை அவர்கள் மருமகளாரும், திரு ஔவை, நடராஜன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியுமான டாக்டர் தாரா நடராஜன் அம்மையார், எம். பி. பி. எஸ்., அவர்கள் தலைமை தாங்கினார்கள். மறைமலையடிகளார் திருமகளாரும் சமாஜச் செயற்குழு உறுப்பினர் திரு வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் வாழ்க்கைத் துணைவியாருமாகிய திருமதி கு. திரிபுரசுந்தரி அம்மையார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். அதன்பின்னர் தலைமையுரை நிகழ்ந்தது. தலைமையுரை அச்சிடப்பட்டு வழங்கப்பெற்றது. அதன் நகல் சித்தாந்த இதழுடன் அனுப்பப்பெறும், பின்னர் திருமதி

சாரதாம்பாள் நம்பியாரூரன் எம். ஏ., அவர்கள் 'கண்ணப்பர் கனிவு' என்பது பற்றியும், திருமதி புனிதவதி இளங்கோவன், எம். ஏ.. அவர்கள் 'தொண்டுக்குத் தொண்டு' என்பது பற்றியும் திருமதி ஜெயகுமாரி பாஸ்கரன் அவர்கள் 'திருவள்ளுவரும் திருத்தொண்டரும்' என்பது பற்றியும் விரிவுரைகள் ஆற்றினர்கள். பழநி திருமதி ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் நன்றியுரை புகன்றனர்.

மங்கையர் மாநாடு மிகவும் சிறப்பாக அமைந்தது என்று யாவரும் புகழ்ந்தனர். இம்மாநாட்டில் பழமையும் புதுமையும் கலந்திருந்தது. மறைமலையடிகள் திருமகளாரின் பேச்சில் அவர் தந்தையாரின் இனிய குரலும், பண்பும ஒலித்தன. கடைசியில் நன்றியுரை பகர்ந்த ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் ஞானத்திருமகள் என்று கூறலாம். அவர்கள் பேச்சில் ஞானியார் சுவாமிகளின் அமைதியும் கருத்தாழமும் இருந்தது. இவ்வாறு இவ்விரு முதியவர்களும் சமாஜத்தைத் தோற்றுவித்த இருசைவப் பெரியார் களின்வாரிசுகளாக விளங்கினர். இம்மாநாட்டுத் தலைவர்மேல் நாட்டு மருத்துவத் துறையில் வல்லவராயிருந்தும் நம் பழைய சமய நூல்களில் ஆழ்ந்த அறிவும் சமய ஆசாரத்தில் பற்றும் உடையவராக இருத்தல் மிகவும் போற்றுதற்குரியது. அவர் தம் தலைமையுரை சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. மற்றச் சொற்பொழிவாளர்களின் பேச்சில் இளமைக்குத் தகுந்த விறுவிறுப்பும், ஆராய்ச்சியும் இன்னிசையும், நகைச்சுவையும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அன்று பிற்பகல் 2-30 மணி முதல் 4-30 மணி வரை மயிலை தெற்கு மாடவீதி எண் 16, கல்யாண மண்டபத்தில் சமாஜ உறுப்பினர் ஆண்டுப் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. இதன் நிகழ்ச்சிகளின் விவரத்தைப் பிறிதோரிடத்தில் காணலாம்.

அன்று மாலை 5-30 மணிமுதல் சைவர் மாநாடு தொடர்ந்து நடைபெற்றது. திருவாசகமணி அவர்களுக்குத் தேகநலம் குறைந்திருந்ததால் இம்மாநாட்டிற்குத திரு கு. வரதராச பிள்ளை, பி. ஏ. அவர்கள் தலைமை தாங்கி இக் கூட்டத்தை நடத்தினர்கள். சமாஜத்தார் வேண்டுகோளுக் கிணங்கி இவர் இப்பொறுப்பை ஏற்றுச் சிறந்த முறையில் இம் மாலை மாநாட்டை நடத்திக் கொடுத்ததற்காக இவருக்குச் சமாஜம் நன்றி செலுத்துகிறது.

இம்மாலை நிகழ்ச்சியில் பேராசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம் ஏ., பி.ஓ.எல்., அவர்கள் "சேக்கிழார் ஓர் பல்கலைக் குரிசில்' என்பது பற்றியும் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம், லிட். அவர்கள் "மரணமிலாப் பெருவாழ்வு" என்பது பற்றியும் 'சித்தாந்தம் ஆசிரியர் திரு மூ. அருணாசலம், எம்.ஏ., அவர்கள் "சைவ ஆகமங்கள்" என்பது பற்றியும் ஆராய்ச்சிமிக்க அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர்கள். அவர்கள் கூறியவற்றை இங்கு விரிக்கிற் பெருகும். ஆனால் ஒன்றுகூற விழைகின்றேன். ஆகமங்கள் என்ற பெயரை நாம் அடிக்கடிப் பயன்படுத்தினலும் "கேட்டறியோம், அதைக் கண்டறிவாரை" என்ற நிலையில் அவை இருக்கின்றன. ஆனல் திரு அருணாசலம் அவர்கள் ஆகமங்களைப் பற்றி மிக்க ஆராய்ச்சி செய்து சமாஜம் நடத்தும் 'சைவ சித்தாந்தா' என்ற ஆங்கில முத்திங்கள் இதழில் 22 பக்கங்கள் கொண்ட ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். 30-9-68ல் வெளிவந்த 'சைவ சித்தாந்தா' என்ற ஆங்கில இதழைக் காண்க.

அன்றிரவு, ஸ்ரீகபாலீச்சுரர் தேவார பாடசாலை மாணவ மாணவிகளைக் கொண்டு தேவார ஆசிரியர் திரு சுந்தரேச தேசிகர் அவர்கள் "அங்கம் பூம்பாவை" என்ற நாடகத்தை மிகவும் அழகாக நடத்திக் கொடுத்தார். இந்நாடக நிகழ்ச்சி பலவகைகளிலும் பாராட்டப்பெற்றது. கல்வித்துறை இணை இயக்குநர் திரு எஸ். வி, சிட்டிபாபு அவர்கள் இந்நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நாடகத்தைப் பாராட்டிப் பேசினர். மாநாட்டுத் தலைவர் திருவாசகமணி அவர்கள் நடித்த இளைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்.

மூன்றும் நாள் நிகழ்ச்சி :-

வழக்கம்போல் திருக்கோயில் வழிபாடும் ஊர்வலமும் நடைபெற்றன. இன் மாநாட்டின் கடைசி நாளாகையால் ஸ்ரீ கபாலீச்சுரர் கோவில் அறங்காவலர்களின் விருப்பப்படி சுவாமிக்கும், அம்பிகைக்கும் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் சிறந்த அலங்காரங்களும் பூசைகளும் நடந்தேறின. தலைவர்களுக்கு மாலைமரியாதைகள் நடைபெற்றன.

காலை 9-30 மணியளவில் சைவ இளைஞர் மாநாடு இறை வணக்கத்தோடு தொடங்கிற்று. ஆட்சி மொழிக் காவலர் திரு கீ. இராமலிங்கனார், எம் ஏ., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மாநாட்டுத் தலைவர் திரு கே. இ. அருணாசலம் எம்.ஏ., பி.காம்., அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். இவர் தாராபூர் கம்பெனி திரு லோகநாத முதலியார் அவர்களின் மருகர். இவர் சமாஜத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் உரை பின்னர் வெளிவரும். தலைமைச் செயலக நிதித்துறையில் அரசு துணைச் செயலாளராகப் பணிபுரியும் திரு செ. தெ. துரைராஜ், ஐ. ஏ. எஸ்., அவர்கள் "சிவநெறி" என்பது பற்றியும் திரு சு. மாரிமுத்து பி. ஏ., அவர்கள் "சைவ சமயமே சமயம்" என்பது பற்றியும் திரு கொ. புண்ணியகோடி அவர்கள் "இசையும் சிவனும்" என்பது பற்றியும் சைவச் செங்கதிர் வித்துவான் இராச செல்வக் கணபதி அவர்கள் "ஒரு பெரும் நெறி" என்பது பற்றியும் ஔவை து. நடராஜன், எம். ஏ., எம்.லிட். அவர்கள் "திருவள்ளுவப் பயன்" என்பது பற்றியும் உரை நிகழ்த்தினார்கள். திரு செ. தெ. துரைராஜ் அவர்கள் பெரும் தமிழ்ப் புலவரான திரு தெய்வசிகாமணி கௌண்டர் அவர்களின் தவப்புதல்வர். அவர் ஐ ஏ.எஸ். பட்டமும் அரசாங்கத்தில் பெரும் பதவியும வகித்திருந்தபோதிலும் சைவத்திலும் சிவசின்னங்கள் சிவபூஜா விதிகள் ஆகியவற்றிலும் ஆழ்ந்த பற்றும் பயிற்சியும் உடையவர். அவர் சமாஜத்தில் மிக்க தொடர்புகொண்டு தற்கால இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று சமாஜம் அவரை வேண்டிக்கொள்கின்றது. எழுச்சிமிக்க சொற்பொழிவுகளாற்றிய மற்ற இளைஞர்களும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

பிற்பகல் 2-30-மணிமுதல் 4-30 வரை தெற்கு மாட வீதியில அமைந்த கல்யாண மண்டபத்தில் சிவயோகி இரத்தினசபாபதி பிள்ளை அவர்களால் யோகப்பயிற்சி நடைபெற்றது. அவ்வமயம் அவர்களால் இயற்றப்பெற்ற 'காய சித்தி' 'திருமந்திரச் சம்பிரதாயம்' ஆகிய இரண்டு நூல்கள் சமாஜ

வெளியீடாக வெளியிடப்பெற்றன. அவைகளின் விலை முறையே ஒரு ரூபாயும், ஐம்பது காசுகளும் ஆகும். இந் நூல்கள் சமாஜத்தில் கிடைக்கப்பெறும்.

அன்றுமாலை 5–30 மணியளவில் சைவர் மாநாட்டின் இறுதிக் கூட்டம் திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "திருக்கோவில்" ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம். ஓ. எல்., அவர்கள் "திருஞானசம்பந்தரின் சிறப்பியல்புகள்" என்பது பற்றிப் பேசினார். வழக்கம்போல் அவர் பேச்சில் உணர்ச்சியும் விறுவிறுப்பும் ஆழ்ந்தகன்ற படிப்பும், ஆராய்ச்சித்திறனும் அமைந்திருந்தன. அவரைச் சைவ உதய சூரியன் என்றும் தற்கால திருஞான சம்பந்தர் என்றும் திருவாசகமணி பாராட்டினார். திருவாசகமணி அவர்கள் அவசரமாக வெளியூருக்குச் செல்லவேண்டியிருந்ததால் திரு முருகவேள் பேச்சின் இடையிலே தம் முடிவுரையை நிகழ்த்தினார். அவர் தம முடிவுரையில் சமாஜத்தாரை மிகவும் பாராட்டி அமெரிக்காவில சைவத்தின் புகழை எடுத்துரைக்க சைவ அறிஞர் ஒருவர் செல்வது மிக மிக அவசியம் என்றும் அதற்காக ஒரு குழுவை நியமித்து ஆவன செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினார். பின்னர் திரு. கே. இ. அருணாசலம் அவர்கள் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். வித்துவான் திரு க. வெள்ளைவாரணர் அவர்கள் 'இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும்' என்பது பற்றியும் மலேயா முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் "சைவ சித்தாந்தத்தில் ஞானம்" என்பது பற்றியும் சித்தாந்தக் கலைச்செல்வர் திரு க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., அவர்கள் "உண்மை விளக்கம்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். திரு இரத்தினம் செட்டியார் பேச்சில் நகைச்சுவையும், ஆராய்ச்சியும் இணைந்திருந்தன. இவர், போலிச் சமயங்களைத் தர்க்க முறையில் கண்டித்து சைவ சமயத்தின் தனிச் சிறப்புகளை எடுத்துக் கூறினார். இவர் சித்தாந்த சாத்திரத்தில் ஆழ்ந்த புலமையுடையவருமல்லாமல், அதில்

உள்ள சிக்கலான கேள்விகளுக்குத் தெளிவான விளக்கங் களைக் கூறித் தர்க்க முறையில் வாதித்துச் சாதிக்கும் ஆற்ற லும் துணிவும் படைத்தவர். திரு க. வெள்ளைவாரணனார், திரு வச்சிரவேலு முதலியார் ஆகியோர் பேச்சுகளில் அவர் களுக்கே உரிய முறையில், அமைதியும், ஆழமும், சைவத் தின் பண்பும், சுவையும், அன்பும், அறனும், நுண்மாண் நுழைபுலமும், ஆன்றவிந்தடங்கிய கொள்கையும், உள்ளந் தொடும் மலரினும் மெல்லிய உணர்ச்சியும், ஆரவார இன்மை யும் அமைந்திருந்தன. இவை சைவத்தின் பண்புகள். ஆகை யால் இவ்விருவரையும் சைவத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லலாம். ஒருவர் தோத்திரத்திற்கும் மற்றொருவர் சாத்திரத்திற்கும் பிரதிநிதி என்று கூறலாம். இருவரும் சைவத்திற்கும் சமாஜத்திற்கும் இருகண்கள் போன்ற வர்கள். சைவம் சிறக்க அவர்கள் நீடூழி வாழ்க என்று கூத்தப்பிரானை வந்திக்கின்றோம்.

வருகிற ஆண்டுவிழாவைக் காஞ்சீபுரத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று காஞ்சீபுரம் சைவப் பெருமக்கள் சார்பில் பெருநிலக்கிழார் திரு சுப்பராய முதலியார் அவர்கள் அழைப்பு விடுத்தார். அவருக்கு மாலை அணி வித்து நன்றிகூறப்பெற்றது.

சமாஜச் சார்பில் வித்துவான் திரு அம்பை சங்கரன் அவர்களும், வரவேற்புக் குழுச் சார்பில் திரு பி. எம். நாய னார் அவர்களும் நன்றிகூற, ஓதுவார்கள் கடவுள் வணக்கம் இசைக்க சமாஜ மாநாடு இனிதே நிறைவுற்றது,

இவ்வாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றதற்குக் காரணமானவர்களைப்பற்றி மிகச் சுருங்கிய அளவில் ஓரிரு வார்த்தைகள் சொல்லாமலிருக்க முடியவில்லை. முதற்கண் இவ்விழாவின் முழுப்பொறுப்பினைத் துணிவுடன் சுபாவி யின் துணைகொண்டு ஏற்றுக்கொண்டவர் சமாஜத்தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்களே இதற்காக அவர் இராப்பகல் பாராது அயராது உழைத்தார்.

அவருக்கு அணுக்கத் தொண்டராக இணைபிரியாது இருந்து தொண்டாற்றியவர் வரவேற்புக் குழுச் செயலாளரும், பொருளாளருமான திரு பி. எம். நாயனுர் அவர்கள். நன்கொடையும் மலருக்கு உதவியும் பெறுவதற்கு இவர்கள் சிறந்த முயற்சி எடுத்துக்கொண்டனர். இவர்கள் இவ்விழாவில் ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கிக் கொண்டனர் என்றே கூறலாம். சில நாட்களில் இவர்களுக்குத் துணையாக இருந்தவர்கள் திரு கி. இராமலிங்கனுர் அவர்களும் திரு கொ. நீ. சிங்காரவேலு அவர்களும் ஆவார்கள். சமாஜ உறுப்பினர்களுக்கு உணவு வசதியை ஏற்பாடு செய்யும் முழுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் தற்போது சமாஜப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற திரு நே. த. கிருஷ்ணசாமி, எம்.ஏ., பி.டி., அவர்கள் ஆவர். தக்க சமயத்தில் அவர் இப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது செயற்குழுவிற்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. அவருக்கு உதவியாக திரு எம். சிவராமன், பி.ஏ., அவர்களும் திரு எம். சந்திரசேகர முதலியார் அவர்களும் ஆவார்கள். திரு அம்பை சங்கரனுர் அவர்கள் அங்கு இங்கு எனுதபடி அவர் தொண்டு தேவைப் பட்ட இடங்களிளெல்லாம் பணிபுரிந்தார். திரு ந. ரா. முருகவேள் அவர்கள் விழா மலருக்கு ஆசிரியராகப் பணி புரிந்து நல்ல முறையில் வெளியிட்டார். திரு பி. எம. நாயனுர் துணையாசிரியராகப் பணிபுரிந்தார். சமாஜச் செயலாளர் திரு மு நாராயணசாமி முதலியார் அவர்கள் வழக்கம் போல் தாம் பின்னணியில் இருந்துகொண்டே சமாஜத்திற்கு வேண்டிய அடிப்படை அலுவல்களைக் கவனித்துக் கொண்டு வந்தார். இறைவன், உயிரில் மறைந்து உயிரை ஆட்டுவித்துக் கொண்டிருப்பதுபோல திரு மு. நாராயணசாமி முதலியார் எப்பொழுதுமே சமாஜத்தில் மறைந்து சமாஜத்தை இயக்கிக்கொண்டிருக்கிறுர்.

இவர்களை எல்லாம் வாழ்த்த நாம் யார்? இத்தொண்டுகளைச் செய்ய இவர்கள் என்ன புண்ணியம் செய்தார்கள்? சமாஜத்துணைத்தலைவராயிருந்த பெ. திருஞானசம்பந்தம் பிள்ளையவர்கள் ஆவார நீரிழிவுயின்றிப் பல துணைகள்

செய்தார்கள் மயிலை பி.எஸ். உயர்பள்ளி சாரணர்கள் ஆண்டு விழாவில் துணை செய்தனர். அவர்களுக்கும் நன்றி. இச்சிவத்தொண்டு செய்கிறவர்களை இறைவன் கைவிடான். இவர்கள்,

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்குயாதுமோர் குறைவிலை''

இவ்விடத்தில் மற்றொரு செய்தியைப் பொறிக்க விரும்புகின்றேன். திருக்குறள்வேள் திருச்சி கு. வரத ராசப் பிள்ளை அவர்களை சைவ உலகம் நன்கறியும். அவர் வாய்வீரர் அல்லர்; செயல் வீரர் என்பது யாவரும் அறிந்தது. அவர் பின்வரும் செய்தியை என்னிடமும் சமாஜத் தலைவரிடமும் கூறினர்.

"ஆங்கிலச் சித்தாந்த இதழ் பொருள் நெருக்கடியில் நடந்துவருவதாகத் தெரிகிறது. அவ்விதழைக் கைவிடாதீர்கள். அதை நடைபெறுவதற்கு நான் செய்யவேண்டுவது இருந்தால் எனக்குத் தெரிவியுங்கள். அதற்கு வேண்டிய திட்டம் இட்டு எனக்கு அனுப்புங்கள். நான் செயற்படுத்துகின்றேன்." என்றார். இவ்வபயக்குரல் என் மனத்தை நெகிழ்வித்தது. இவ்வாறே திரு. காசிநாததுரையவர்களும் சமாஜத் தலைவரிடம் அண்மையில் (9-12-68) குன்றக்குடியில் கூறினர்.

மேலும் திருக்கோயில்களெல்லாம் ஆங்கில சைவ சித்தாந்தத்திற்கு உறுப்பினர்களாவதற்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் தலைவர் உதவவேண்டுமென்று அன்னாரைக் கேட்டுக்கொண்டார். இராமநாதபுரம் அரசர் தம் ஆளுகைக் கீழ் உள்ள திருக்கோயில்களில் ஆங்கில சைவ சித்தாந்தத்தை வரவழைத்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டார். செயற்குழு இவற்றை நன்றியுடன் மனத்தில் கொள்ளும்.

இதில் மற்றவர்களுக்கும் கடமையுண்டு. சமாஜத்திற்கும், ஆங்கில முத்திங்கள் இதழுக்கும் தாம் உறுப்பினர்களாவதுடன் மற்றவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்ப்பது சைவர் ஒவ்வொருவரது முதற்கடமை என்பதை மனத்தில் கொள்ள வேண்டிக்கொள்கிறேன்.

''ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே''

1969–ஆம் ஆண்டுக்குரிய
சமாசப் பணியாளர்கள்

(திருமயிலை மாநாட்டில் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள்.)

—:(◎):—

தலைவர் :

திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை (ஐ. ஏ. எஸ்.) ஒய்வு

துணைத் தலைவர்கள் :

1. திரு. க, அரங்கசாமி முதலியார் பி. ஏ.
2. திரு K. E. அருணசல முதலியார் எம். ஏ., பி. காம்.

செயலாளர் :

திரு. மு நாராயணசாமி முதலியார்

துணைச் செயலாளர் :

திரு. M. சிவராமன் பி. ஏ.

பொருளாளர் :

திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார், எம்.ஏ., பி.டி.

சித்தாந்தம் ஆசிரியர் :

திரு. மு. அருணசலம் எம். ஏ.

சித்தாந்தம் துணை ஆசிரியர் :

வித்துவான், திரு. இரா. சங்கரன்

மாதக் கணக்குத் தணிக்கையாளர் :

திரு. V. ஆறுமுக முதலியார்

ஆண்டுக் கணக்கு தணிக்கையாளர் :

V. திருநாவுக்கரசு பி. ஏ.

செயற்குழுவினர் ;

1. திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ.
2. ,, நல். முருகேச முதலியார் பி. ஏ.
3. P. திருஞானசமபந்தம எம் ஏ. எல்.டி.
4. ,, அய்யா. சுப்பிரமணிய முதலியார்
5. ,; பூ, ஆலால சுந்தரஞ் செட்டியார் எம். ஏ,

6. ,, கீ. இராமலிங்க முதலியார் எம், ஏ.
7. வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை
8. வித்துவான் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை
9. திரு. கொ. நீ சிங்காரவேலு எம். ஏ.,
10. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் எம். ஏ.
11. திரு. P. முத்துக்குமாரசாமி நாயனார்
12. திரு. நா. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.

பணியாளர் குழு: திருவாளர்&திருமதி

1. சி. எம் இராமச்சந்திரஞ் செட்டியார், கோவை.
2. க. வச்சிரவேலு முதலியார், காஞ்சி.
3. வைரவப் பிள்ளை, கொழும்பு.
4, பு. ரா. சுவாமிநாதன் எம். ஏ. எல். டி. சிதம்பரம்.
5, எஸ். நடராச நாடார் பி. ஏ., பி. எல்.,
6. வித்துவான் கா. வெள்ளைவாரணனார், சிதம்பரம்.
7, கு. காமாட்சி அம்மாள் எம். ஏ., சேலம்.
8. எஸ். நாராயணன் செட்டியார், காரைக்குடி.
9 அண்ணாமலை செட்டியார், காரைக்குடி.
10. R. திருநாவுக்கரசு பிள்ளை, குடந்தை.

சித்தாந்தம் ஆசிரியர் ஆலோசனைக் குழு:

1. திரு. க. வச்சிரவேல் முதலியார், காஞ்சி.
2. ,, எஸ். அம்பிகை பாகன், யாழ்ப்பாணம்.
3. ,, க. வெள்ளைவாரணனார், சிதம்பரம்.
4. ,, ஆ. சுப்பிர மணியம். பொறியர்.
5. ,, ந. ரா. முருகவேள்.

ஆராய்ச்சிக் கழகம்:

1, மேலையூர் திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்.
2. வித்துவான், திரு. சிவப்பிரகாச தேசிகர், சிதம்பரம்
3. வித்துவான் சொ. சிங்காரவேலனார்.
4. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்.
5. வித்துவான் அருணை வடிவேலு முதலியார்.
6 வித்துவான் பா. சுந்தரேசம் பிள்ளை, குடந்தை.

வெளியூர் ஆலோசனைச் சபையினர்: செங்கற்பட்டு

1. வித்துவான் திருஞானசம்பந்த முதலியார், காஞ்சி.
2. கே. இராசு முதலியார், சைவண்டூர்.
3. சி. பாலசுப்பிரமணியம். குன்றத்தூர்.
4. அ. கு. சண்முக முதலியார், காஞ்சிபுரம்.

தென்னார்க்காடு

1. என். எம். பொன்னம்பலம் பிள்ளை, சிதம்பரம்
2 எஸ். இரத்தினசாமி செட்டியார், சிதம்பரம்
3. சிவ. பழமலை, பெண்ணாகடம்

புதுவை

1. சேஷுபதி முதலியார்
2. ஆர். எஸ். பழமலை
3. சென்னியப்ப முதலியார்

காரைக்கால்

1. சொ. தட்சிணாமூர்த்தி முதலியார்
2. கே. எஸ். எஸ். நடேச முதலியார்

தஞ்சாவூர்

1. விருத்தாசல செட்டியார்
2. வைத்திலிங்க முதலியார்
3. R. திருநாவுக்கரசு முதலியார்

திருச்சிராப்பள்ளி

1. ராம. அண. அண்ணாமலைச் செட்டியார், அரிமழம்
2. எஸ். எல்லப்பச் செட்டியார். அரிமழம்
3. கி. ஆ. பெ. விசுவநாதன்
4. G. வரதராஜ பிள்ளை, திருச்சி.

இராமநாதபுரம்

1. எஸ். நாராயணன் செட்டியார், காரைக்குடி
2, சிடி. எம். என் நாராயணன் செட்டியார், ஆத்தங்குடி
3. காசிநாததுரை, இராமநாதபுரம்
4. K. C. வேலாயுதம், ஸ்ரீவில்லிபுத்தூர்

மதுரை

1. இராதா தியாகராசன், மதுரை
2. புஷ்பம் நடராச நாடார்' மதுரை
3. வித்துவான் ஔவை. சு, துரைசாமி பிள்ளை, மதுரை
4. பெருமாள்சாமி பிள்ளை, பழனி

திருநெல்வேலி

1. வி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, அம்பாசமுத்திரம்
2. வித்துவான் மறை திருநாவுக்கரசு, தூத்துக்குடி
3. எஸ். எஸ். அருணாசலம் பிள்ளை, திருநெல்வேலி
4. சிவ. ராம. அ. நடராச முதலியார், அம்பாசமுத்திரம்

வட ஆர்க்காடு

1. புரிசை முருகேச முதலியார், திருவண்ணுமலை
2. வி, எஸ். கணபதி முதலியார், பெருங்கட்டூர்

கன்னியாகுமரி

1. சி. வள்ளிநாயகம் பிள்ளை பி.ஏ.' பி.எல்.
2. வித்துவான் சி. குமரேச பிள்ளை

சேலம்

1. அ. கு. காமாட்சியம்மையார், சேலம்
2. அப்பாய் செட்டியார், சேலம்

தர்மபுரி

1. மணிவாசகம், பொத்தனூர், சேலம்
2. எம். ஆர். குணசீலன, தர்மபுரி

கோவை

1. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், கோவை
2. கே. பி. ஆர். சுப்பராயன், சிவகிரி
3. நா. ஆறுமுகம். புன்செய்ப் புளியம்பட்டி

பெங்களூர்

1. ஏ. ஆர் அண்ணுமலை முதலியார்
2. எஸ். கனகசபாபதி பிள்ளை
3. பதுமநாப முதலியார்

கொழும்பு

1. குல சபாநாதன்
2. அருள் தியாகராசா
3. சபாபதிப் பிள்ளை

திரிகோணமலை

1. பண்டித ஆர். வடிவேலு
2. எஸ். அம்பலவாணன்

மட்டக்களப்பு

1. க. அருணுசல தேசிகா
2. பூபால பிள்ளை
3. கணபதி

மலாய் நாடு

1; சிலநேயன்
2. ஆ. மு. பெரியசாமி பிள்ளை
3. ஆர். வி. கந்தையா
4. எம். இராமசாமி முதலியார்
5. முரு. பழ. இரத்தினம் செட்டியார்

கல்கத்தா

1. என். என். தியாகராாசன்; தமிழ் இலக்கியக் கழகம்
2. என். சிங்காரம், பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்,
31-B. ராஜாபசந்த ராய் ரோடு, கல்கத்தா–29
3; K. T. பிள்ளை, கல்கத்தா

பம்பாய்

1. ஆர். முருகையா, 6–67 சரசுவதி காலனி, மாதுங்கா, பம்பாய்–19

தில்லி

1. எம். எஸ். பி. சண்முகம் எம். ஏ., தில்லித் தமிழ்ச் சங்கம்
2. டாக்டர் பா. நடராசன்

"ஆங்கில சைவசித்தாந்தா ஆலோசனைக்" குழு

ஆசிரியர் : டாக்டர் V. A. தேவசேனாபதி எம். ஏ பி எச்.டி.
துணையாசிரியர் : P. முத்துக் குமாரசாமி நாயனார்.

ஆலோசனைக் குழு :

1. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி.
2. K. கோதண்டபாணிப் பிள்ளை பி. ஏ.
3. கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு)
4. நல் முருகேச முதலியார் பி. ஏ.
5, க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ,. எல். டி.
6. பெ. திருஞானசம்பந்தம் எம். ஏ., எல். டி.
7. மு. அருணாசலம் எம். ஏ.

திரு. நாராயணசாமி முதலியார் மணிவிழா

நம் சமாஜச் செயலாளர் திரு. மு. நாராயணசாமி முதலியார் அவர்களின் 60ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா மார்கழி 9ஆம் நாள் (23-12-68) திங்கட்கிழமை யன்று இராயப்பேட்டை திரு வி. க. மணிமண்டபத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. நம் சமாஜச் சார்பில் வாழ்த்திதழ் வாழ்த்தி சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளையவர்கள் கொடுத்தார்கள். மேலும் மணிவிழாத் தம்பதிகளுக்குப் புத்தாடைகளும் வழங்கப் பெற்றன. மற்றும் பல பெருமக்களும் வாழ்த்தினர்.

மணிவிழாக் கண்ட முதலியார் அவர்கள் அப்பெரு விழாவின் நினைவுக் குறியாக சமாஜத்திற்குத் தம் சமயக் காணிக்கையென ரூ. 25/-அன்பளிப்பாக வழங்கினார்கள். மேலும் ஒன்பதாம் திருமுறையாம் "திருவிசைப்பா திருப் பல்லாண்டு மூலம் மட்டும்" என்னும் நூலைத் தம் மணி விழா நினைவாக சமாஜச் சார்பில் அடக்க விலை மதிப்பில் தம் சொந்தச் செலவில் வெளியிட்டது மிகவும் போற்றத் தக்கது. ஒன்பதாந்திருமுறை இதுகாறும் வெளிவந்த பதிப்புக்களுள் இது மிகவும் திருத்தமுற்ற பதிப்பு என்று கூறலாம். நல்ல ஆராய்ச்சி முன்னுரை, திருவிசைப்பா ஆசிரியன்மார் சரித்திரம் முதலிய யாவையும் இந்நூலில் அடங்கியுள்ளன. தனிப்பிரதி விலை ரூ. 1-00. 6 பிரதிகள் விலை ரூ. 5-00 ஆகும். வேண்டுவோர் சமாஜச் செயலா ளருக்கு தபால் செலவோடு பணம் அனுப்பி விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம்.

மேலும் பாராயணத் திரட்டு என்னும் அன்பளிப்புச் சிறு வெளியீடு ஒன்றையும் மணிவிழா நினைவாக வெளி யிட்டு யாவருக்கும் வழங்கினர்.

மணிவிழாக் கண்ட தம்பதிகள் சமய வாழ்வே தம் வாழ்வென வாழ்ந்து காட்டிய பெருமக்களாவர். நம் சமாஜ அடக்க விலைப்பதிப்பு நூல்கள் யாவும் நம் முத லியார் அவர்களின் பேருழைபபால்-அயரா ஊக்கத்தால் வெளிப்போந்தவை என்றால் அது மிகையாகாது. நம்

சமாஜப் பண்டைய நிலையை நினைவூட்டி ஊக்குவது போன்று தம் மணிவிழாவிலும் 9ஆம் திருமுறைப் பதிப்பை வெளியிட்டு நம்மை அவர் விழித்தெழச் செய்துள்ளார். மணிவிழாக் கண்ட தம்பதிகள் எல்லா நற்பேறுகளும் பெற்று இன்னும் சமயத் தொண்டில் சிறந்து இலங்கி வருங்கால சமுதாயம் மேம்பாட்டிலங்க வழி வகுத்துக்காட்டி நீடுநின்று நிலவ எல்லாம்வல்ல போரிவாழ் முருகப்பெருமான் அருள் சுரப்பாராக.

திருவாசகம் சமாஜ அடக்கவிலைப் பதிப்பு

நம் சமாஜத்தின் மூலம் அடக்க விலைப்பதிப்பு வெளியீடுகள் வெளிவராத காரணம் என்ன என்று அன்பர்கள் பலர் கேட்டவண்ணமிருக்கின்றனர். முன்னர் சைவத் திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திர நூல்களை சமாஜம் தான் வெளியிட்டது. தற்போது மடாலயங்கள், நம் சமய நிறுவனங்கள் பிறவும் அவற்றை வெளியிட முனைந்துள்ளன. ஆதலின் நம் பணியை அவர்கள் ஆற்றும் போது மகிழ்ச்சியோடு வேறு பணி செய்யலாம். எனவே திருமுறைகளைப் பரப்பல், சமய அறிவு விளக்கத்தொண்டாதியவற்றைச் சமாஜம் செய்து வருகிறது.

இருப்பினும் அன்பர்கள் பலர் நம் சமாஜ அடக்க விலைப்பதிப்பு வெளியீட்டையே பெரிதும் விரும்பிக் கடிதங்கள் மூலம் கேட்டவண்ணமிருக்கின்றனர். அதனுல் மறுபடியும் அடக்க விலை வெளியீடுகளை வெளியிடலாம் என சமாஜம் கருதுகிறது. தக்க செல்வர்கள் பணம் கொடுக்க முன்வருவரேல் சமாஜப் பதிப்பாக அவர்கள் செலவில் வெளியிட்டு அந்நூல்கள் விற்க விற்கப் பணம் திருப்பித்தரப்பெறும். தற்போது திருவாசகம் மூலம் மட்டும் மிகவும் சிறந்த பதிப்பாகத் திருமயிலையில் நிகழ்ந்த நம் சமாஜ 63ஆம் ஆண்டு விழாவில் வெளியிடப்பெற்றது. அன்பர்களுக்கு ஞாபகமிருக்குமென்று கருதுகின்றேன். இது பல திருத்தங்களோடு கூடிய சிறந்த பதிப்பாகும்.

நல்ல அச்சு, ஆராய்ச்சி முன்னுரை முதலியன கொண்டன. விலை ரூ. 1–00 நூல் வேண்டுவோர் சமாஜச் செயலாளர் முகவரிக்கு அஞ்சற் செலவுக்கும் சேர்த்துப் பணமனுப்பி விரைவில் நூலைப் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். 9ஆம் திருமுறை சமாஜ அடக்கவிலைப் பதிப்பு ரூ. 1-00 என்பதையும் நினைவூட்டுகிறோம்.

மாநாட்டுத் தீர்மானங்கள்

சைவ சித்தாந்த மகாசமாஜ உறுப்பினர் ஆண்டுப் பொதுக்கூட்டம் சமாஜ 63ஆம் ஆண்டு விழாவின்போது 28—12—68 சனிக்கிழமை பிற்பகல் 2–30 மணிக்கு நிகழ்ந்தது. இக்கூட்டத்திற்கு சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்கள் ஐ. ஏ. எஸ். (ஓய்வு) தலைமை தாங்கினூர். அவ்வமயம் நிறைவேற்றிய தீர்மானங்கள் வருமாறு:—

(1) முதற்கண் இக்கூட்டம் இவ்யாண்டு பின்வரும் சமாஜ உறுப்பினர்கள் நம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்தமை குறித்து வருத்தம் தெரிவித்து அவர்கள் ஆத்மா அமைதியுறப் பிரார்த்தித்து இரண்டு நிமிடங்கள் அமைதியில் ஆழ்ந்தது.

1. திரு. பெ. கோவிந்த மூப்பனூர், ஸ்ரீவில்லி புத்தூர்.
2. குகஸ்ரீ இரசபதி அவர்கள், சென்னை.
3. திரு சுந்தரம் பிள்ளை, பிரம்பூர்.
4. ,, அய்யா ஆறுமுக முதலியார்.
5. ,, V. K. C. நடராஜன் ஐ. எ. எஸ்.
6. ,, K. C. நாகலிங்க முதலியார், சென்னை.
7. ,, P. R. வேங்கடராம பிள்ளை.
8. ,, செங்குளம் கோவிந்த பிள்ளை.
9. ,, ஆறுமுக நாவலர், நாகர்கோயில்
10. ,, T. K. சுப்பிரமணிய பிள்ளை, சென்னை.

12. ,, R. பஞ்சநதம் பிள்ளை, திருச்சி.
13 ,, ரா. இராமநாதன் செட்டியார், காரைக்குடி.
14. ,, சிதம்பரம் செட்டியார், காரைக்குடி.
15. ,, V. V. C. R. முருகேச முதலியார், பழனி.

(2) இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் இந்து சமய அறநிலையங்களின் உபரித்தொகையைச் சமுதாய நலத் திட்டங்களுக்கு எடுத்துச் செலவிட வேண்டும் என்று கூறிவருவதைக் கைவிடவும், அவ்வுபரித் தொகையை வருமானமில்லாத திருக்கோயில்களின் சீர்திருத்தங்கட்கும் இந்து சமய வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

முன்மொழிந்தவர் திருமறை. திருநாவுக்கரசு, தூத்துக்குடி,
வழிமொழிந்தவர் திரு. ஊரன் அடிகள், திருச்சி.
தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(3) தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் மாநில ஆலோசனைக் குழுவில் சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும்படி இம்மாநாடு அரசை வேண்டிக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் திரு. ஊரன் அடிகள், திருச்சி.
வழிமொழிந்தவர் திரு. P. முத்துக்குமாரசாமி நாயனுர், சென்னை.
தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(4) பின்னர் சமாஜ அலுவலர்கள் தேர்வு நடைபெற்றது. விவரம் இவ்விதழில் வேறோரிடத்தில் காண்க.

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம் - 1905 — பதிவு - 1915)

63-ஆவது ஆண்டு அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில் தவத்திரு ஞானியாரடிகள் திருமடத்தில், அவர்கள் முன்னிலையில் அருள்திரு மறைமலையடிகளாரால் விசுவாவசு ஆண்டு ஆனித்திங்கள் 24-ஆம் நாள் (7-7-1905) வெள்ளிக்கிழமை தொடங்கப்பெற்றது. சிவபெருமான் திருவருளால் இன்றுவரை மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்க வேண்டுமென்ற பெருநோக்கத்தோடு அது தொண்டாற்றி வருகின்றது. இச்சமாஜம் சபைகளுக்குரிய பதிவுச் சட்டப்படி எஸ். 6/1915-16 எண்ணில் 11-11-1915-ஆம் தேதியில் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

2. இவ்வாண்டின் சமாஜப் பணியாளர்கள்

தலைவர்	:	வித்துவான் - திரு. கோ. மு. முத்துசாமிபிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு)
துணைத்தலைவர்கள்	:	திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ., எல். டி. திரு. கு. வரதராச பிள்ளை, பி. ஏ.
பொதுச்செயலாளர்	:	திரு. சி. வடிவேல் (16-11-68வரை) திரு. மு. நாராயணசாமி முதலியார் (17-11-68 முதல்)

துணைச்செயலாளர் : திரு. மு. நாராயணசாமி முதலியார் (16-11-68 வரை)

பொருட்காப்பாளர் : வித்துவான் - திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை.

சித்தாந்தம் ஆசிரியர் : திரு. மு. அருணசலம், எம். ஏ.

,, துணையாசிரியர் : வித்துவான்-திரு. அம்பை. இரா. சங்கரனர்.

மாதக் கணக்குத் தணிக்கையாளர் : திரு. வி. ஆறுமுக முதலியார்.

ஆண்டுக் கணக்குத் தணிக்கையாளர் : திரு. கி. இல. பழநி சாமி, பி. ஏ., எல். டி.

செயற்குழுவினர் :

1. திரு. க. அரங்கசாமி முதலியார், பி. ஏ.
2. திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.
3. திரு. கீ. இராமலிங்க முதலியார், எம். ஏ.
4. வித்துவான் - திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை.
5. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.
6. ,, ஆர். சம்பந்தமூர்த்தி முதலியார்.
7. ,, கொ. நீ. சிங்காரவேலு, எம். ஏ.
8. ,, அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.
9. ,, தி. கி. நாராயணசாமி நாயுடு,
10. ,, பி. முத்துக்குமாரசாமி நாயனர் (27-4-68 வரை)
    ,, கே. இ. அருணசலம், எம். ஏ., பி. காம். (28-4-68 முதல்)
11. ,, ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.
12. ,, நல். முருகேசமுதலியார், பி. ஏ. (8-1-68 வரை)
    ,, நே. த. கிருஷ்ணசாமி முதலியார், எம். ஏ., பி. டி. (25-2-68 முதல்)

3. அறுபத்திரண்டாவது ஆண்டு நிறைவு விழா

நம் சமாஜத்தின் 62-ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் 29-12-67, 30-12-67, 31-12-67 ஆகிய மூன்று நாட்களிலும் திருவெண்காடு சுவேதாரணியேசுவரர் தேவத்தானப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மிகச்சிறப்பாக நடைபெற்றன. மேலையூர் தவத்திரு மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள், திருமதி இந்திரா சோமசுந்தரம், எம். ஏ., திரு. கு. ஆளுடைய பிள்ளை எம்.காம். ஆகியோர் முறையே மூன்று மாநாடுகளுக்கும் தலைமை தாங்கினர். திருக்குறள்வேள் திரு. கு. வரதராசப் பிள்ளை அவர்கள் கொடியேற்றினார்கள். வரவேற்புக் குழுத் தலைவர் திரு.கே. கனகசபை பிள்ளை அவர்கள் வரவேற்புரை யாற்றினார்கள். திருமதி. ஆர். இராதா அம்மையார் அவர்கள் மாநாட்டுத் திறப்புரையை யாற்றினார்கள்.

திருவெம்பாவை மா. ப. தியாகராசனார் எழுதிய விசேட உரையுடன் கூடியநூல் ஒன்றினை அன்றே திரு. சீ. இராமலிங்கனார், எம். ஏ. அவர்கள் வெளியிட்டார்கள். மாநாடு மூன்று நாள்களிலும் மிகச்சிறப்புற நிகழ்ந்தது. சமாஜ அன்பர்கள் அருகிலுள்ள பல தலங்களுக்கும் சென்று வழிபடும் வாய்ப்பைப் பெற்றனர். விழா சிறப்புற நிகழ உதவிய திருவெண்காடு சீனிவாசம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை, நாகலிங்கம் பிள்ளை முதலிய யாவருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

4. சைவ சமய குரவர் விழாக்கள்

திரு. கே. இ. அருணாசலம் அவர்கள் அளித்த நன்கொடையால் திருமயிலைக் கபாலீச்சரத்தில் 22-4-68-ல் அப்பர் திருநாளில் கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் திருநாவுக்கரசர் பற்றிப் பேசினார். திருமுறை காவலர் அ. சோமசுந்தரஞ்செட்டியார் அவர்கள் அளித்த பொருளுதவி

யால் ஏற்பட்ட சமாஜக் கட்டிடப் பொறுப்பு வாரியத்தின் ஆதரவில் 11-6-68ல் சம்பந்தர் திருநாளில் குலசை ப. இராமநாதபிள்ளை சம்பந்தர் பற்றிப்பேசினர். 30-6-68ல் திரு. டி.எஸ். இராமலிங்கம் பிள்ளை, எம். ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார் மாணிக்கவாசகர் பற்றிப் பேசினர். அன்றே திருமயிலைத் தேவாரத் திருப்பதிகமும் வாயிலார் நாயனர் புராணமும் விளக்கவுரையுடன் எனும் நூலும் வெளியிடப்பெற்றது.

1-8-68ல் சி. மாரிமுத்து பி. ஏ. சுந்தரர் பற்றிப் பேசினர்.

5. சேக்கிழார் விழா

1-6-68 ஆம் நாள் மயிலை கபாலீச்சுரத்தில் திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம். ஏ. அவர்கள் "சேக்கிழார்" பற்றி விரிவுரையாற்றினர்.

6. அருணந்தி சிவம் மெய்கண்டார் விழாக்கள்

20-9-68 மாலையில் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு) "அருணந்தி சிவம்" என்பது பற்றியும், 20-10-68 மாலையில் குலசை ப. இராமநாத பிள்ளை அவர்கள் "மெய்கண்டார்" என்பதுபற்றியும் கபாலீச்சரத்தில் பேசினர்.

7. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் அறக்கட்டளை

மேற்குறித்த கட்டளையின்படி (ரூ. 1000) திருநீலகண்ட நாயனர்விழா 24-1-68 மாலை கபாலீச்சுரர் ஆலயத்தில் சமாஜச் சார்பில் நிகழ்ந்தது. திரு.மா. ப. தியாகராசன், பி.ஏ. அவர்கள் தலைமையில் வித்துவான் அம்பை இரா. சங்கரனர் "திருநீலகண்டர்" பற்றிப் பேசினர்.

30-4-68 மாலையில் மங்கையர்க்கரசியார் விழா வெள்ளீச்சுரர் ஆலயத்தில் நிகழ்ந்தது. வித்துவான் எஸ். ஞானப்பிரகாச தேசிகர், பி. ஏ. மங்கையர்க்கரசியார் பற்றிப் பேசினர்.

18-5-68 மாலையில் திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ. அவர்கள் "உமாபதிசிவம்" பற்றிப் பேசினர்.

19-5-68 மாலையில் திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் "பாம்பன் சுவாமிகள்" பற்றிப்பேசினர். இவ்விரு சொற்பொழிவுகளும் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த சன சபையில் நிகழ்ந்தன.

திரு. பிள்ளையவர்களின் இரண்டாம் அறக்கட்டளை (ரூ.1000) தம் தந்தையார் திரு. சொ. சபாபதி பிள்ளை, தாயார் திருமதி மீனாட்சியம்மையார் நினைவாக நிறுவப் பெற்றது. இம் மூலநிதியின் வருவாயிலிருந்து நான்கு சொற்பொழிவுகள் ஆண்டு தோறும் நிகழ்த்த வேண்டும். (1) வைராக்கிய சதகம் அல்லது கொலைமறுத்தல் (2) பிரபுலிங்கலீலை அல்லது திருப்போரூர்ச் சந்நிதிமுறை (3) தவத்திருஞானியாரடிகள் சரித்திரமும் போதனையும் (4) திரு. வி. க.வும் பெண்மையும் அல்லது பாரதப் பெண்மணிகள் கற்பும் வீரமும்.

இவ்விரண்டாம் அறக்கட்டளை வரும் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் என்பது தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

௮. கபாலீச்சரமும் சமாஜமும்

இவ்வாண்டு கபாலீச்சரத்தில் நிகழ்ந்த விடாயாற்றிவிழா வில் நம் சமாஜ அன்பர்கள் பலர் பங்குகொண்டு சமயவிரிவுரைகள் ஆற்றினர். கபாலீச்சரத்தோடு சமாஜம் பலவகைகளில் தம் தொண்டுகளால் பின்னிப் பிணைந்திருப்பினும் இதுபோன்ற நெருங்கிய தொடர்பு இன்னும் சிறப்பாகக் குறிக்கத்தக்க நிகழ்ச்சி என்று கூறலாம்.

9. திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் மணிவிழா

10-12-67 அன்று கபாலீச்சரத்தில் திருவாசக மணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் மணிவிழா நம் சமாஜச் சார்பில் திரு. சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் சிறப்புறக் கொண்டாடப்பெற்றது. பெருமக்கள் பலர் பாராட்டுடன் பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

10. காலைக் கூட்டு வழிபாடு

மலேயா திரு. கா. இராமநாதஞ் செட்டியார் நம் சமாஜச் சார்பில் தொடக்கி வைத்த காலைக்கூட்டுவழிபாடு நாள்தோறும் திருமயிலைக் கபாலீச்சுரர் திருக்கோயிலில் தவறாது நிகழ்ந்து வருகிறது.

11. பெரியபுராண விரிவுரை

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை சென்னை, இலிங்கச் செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ மல்லிகேச்சுரர் கோயிலைச்சார்ந்த சபைக்கட்டடத்தில் சித்தாந்தவித்தகர் கயப்பாக்கம் திரு. சோம சுந்தரஞ் செட்டியார் அவர்கள் சமாஜக் கட்டடப் பொறுப்பு வாரியம் ஆதரவில் நடத்தி வந்த பெரிய புராண விரிவுரை நிறைவு விழா 1-3-68 மாலையில் திரு. கே. இ. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. பலர் சொற் பொழிவாளரைப் பாராட்டிப் பேசியதோடு பணமுடிப்பும் வழங்கப்பட்டது.

மேலும் நம் சமாஜப் புது அலுவலகத்தில் பெரிய புராண விரிவுரைத் தொடக்கவிழா 7-4-68 அன்று திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார் அவர்கள தலைமையில் நிகழ்ந்தது. திரு. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்களே அத் தொடர் விரிவுரையையாற்றி வருகின்றார். ஒவ்வொரு ஞாயிற் றுக்கிழமையும் காலையில் இச்சொற்பொழிவு நிகழ்ந்து

வருகிறது. அன்பர்கள் அன்பளிப்பு, சமாஜக்கட்டிட பொறுப்பு வாரிய நிதி முதலிய வருவாயிலிருந்து இவ்விரிவுரை நிகழ்ந்து வருகிறது.

12. கா. இராமநாதன் செட்டியார் நினைவுக்கட்டளை

திரு. கா. இராமநாதன் செட்டியார் நினைவுக்கட்டளைக்கு ரூ. 750/- இருந்தது. திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் ரூ.250/- தந்துள்ளார்கள். ஆகஇக்கட்டளைநிதி ரூபாய் ஆயிரத்தின் வருவாய்மூலம் ஆண்டு தோறும் மெய்கண்டார் விழாவைச் சிறந்த முறையில் நிகழ்த்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அடுத்த ஆண்டுமுதல் இக்கட்டளை வருவாயிலிருந்து அவ்விழா நடத்தப்பெறும்.

13. சமாஜத் தேர்வு

1968 ஆண்டு 19 பேர்கள் சைவப் புலவர்தேர்விலும் 10 பேர்கள் இளஞ்சைவப் புலவர் தேர்விலும் கலந்து கொண்டனர். திருச்சிற்றம்பலம், சென்னை, நாகர்கோயில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகியஇடங்களில் தேர்வுகள் நிகழ்ந்தன. பிறவிவரங்கள் பின்னர்ச் சித்தாந்தத்தில் வெளியிடப்பெறும்.

14. ஆங்கிலப்பத்திரிகை "சைவ சித்தாந்தா"

சமாஜத்தின் அறுபதாண்டு நிறைவு விழாவின்போது தொடங்கப்பட்ட ஆங்கில முத்திங்களிதழ் "சைவ சித்தாந்தா" இவ்வாண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்விதழ் சிறக்கப் பலவகைகளிலும் முயன்றுவரும் தலைவர் கோ. மு. முத்துசாமிபிள்ளையவர்களுக்குச் சமாஜத்தின்பாராட்டு என்றும் உரியது. முன்னாள் ஆசிரியர் நல். முருகேச முதலியார் பி. ஏ. அவர்களுக்கும் தற்பொழுதைய ஆசிரியர் டாக்டர். வி. ஏ. தேவசேனாபதி, எம். ஏ., பி. எச்டி. அவர்களுக்கும் மற்றும்

கட்டுரைகள் எழுதித்தரும் பெரியோர்களுக்கும் சமாஜம் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது. இதற்குப் போதிய ஊக்கம் பொது மக்கள் தருவார்களானால் மிக நன்முறையில் நடத்தலாமென்பதுறுதி. பல நம் சைவ சமய நிலையங்களும், சைவப்பெரியார்களும் இதற்கு உறுப்பினர்களாகச் சேர வேண்டுகின்றோம்.

15. போதுக்குழு, செயற்குழுக் கூட்டங்கள்

இவ்வாண்டு பொதுக்கூட்டம் இரண்டும், செயற்குழுக் கூட்டம் பன்னிரண்டும் நடைபெற்றன.

16. பொருள்நிலை

1-12-67 முதல் 30-11-68 முடிய 12 மாதங்களின் வரவு செலவுக்கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடுகள் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டடப் பொறுப்பு வாரிய வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடும் இதனுடன் இணைக்கப் பட்டிருக்கிறது.

17. வேண்டுகோள்

சமாஜத் தொண்டு இன்னும் சிறந்து மிளிர வேண்டுவனபல வுள. உடனடியாகக் கட்டடம் தேவை. தற்போது இரு அறைகளில் வாடகைக்கு சமாஜ நிலையம் இயங்கி வருகின்றது. கட்டடநிதிக்கென மணலி திரு. இராமகிருஷ்ண முதலியார் ரூ. 4000/- தந்துள்ளார்கள். அவர்கள் கொடுக்க இசைந்த மீதி ரூ. 2000/- ஐயும் விரைவில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மலேயாவாழ் பேரன்பர் திரு. சிவநேசன் அவர்கள் கட்டட நிதிக்கென ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக உதவியுள்ளார்கள். அவர்களைப்போன்று தக்கவர் பலரும்

முன்வருவரேல் சமாஜக் கட்டடக் குறை விரைவில் நீங்குவ துறுதி. அன்பர்கள் ஆவனசெய்ய முன் வருவார்களாக.

தற்போது சமாஜ உறுப்பினர் எண்ணிக்கை 727. (ஆயுள் உறுப்பினர் 166; பிறர் 561)ஆக உள்ளது. ஒவ்வொரு உறுப்பின ருக்கும் சித்தாந்த இதழ் இலவசமாக அனுப்பப்படுகிறது. 63 ஆண்டுகளாக அரும்பணி ஆற்றிவரும் சமாஜ உறுப்பினர் எண் ணிக்கையை அதிகமாக்க வேண்டுமென்பது கூறுதேயமையும். சமாஜ உறுப்பினர் யாவரும் அவ்வம்மாவட்டங்களில் முயன்று உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்த முயல்வார்களாக.

18. நன்றி

சைவ சித்தாந்த மகா சமாஜத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்த உயர்திரு மறைமலையடிகளார், தவத்திரு. ஞானியார் சுவாமிகள், திரு. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை ஆகி யோருக்கும் சமாஜத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட திரு. வி. கலியாணசுந்தரனார் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் போன்றோருக்கும் சமாஜம் வணக்கமும், நன்றியும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. மற்றும் பல்லாற்றானும் சமாஜப்பணியில் ஈடுபட்டுவரும் அன்பர்கள் அனைவருக்கும் சமாஜம் நன்றி தெரி வித்துக்கொள்கின்றது. சமாஜப்பணி சிறக்கவும், சைவம் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல சிவபெருமான் இன்னருள் சுரப்பானாக.

செயற்குழுவினர் அனுமதிப்படி

இங்ஙனம்

சென்னை
22—12—'68

மு. நாராயணசாமி

செயலாளன்.

சைவ சித்தாந்த மகா சமாஜ 63-ஆம் ஆண்டு வரவு செலவுத் தொகுப்பேடு

(1—12—67 முதல் 30—11—68 வரை)

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	11	51	அச்சுவகை	2137	25
முன் பாங்கு இருப்பு (S. B. Account)	5245	30	காகிதம் முதலியன	712	18
தவணை வைப்பு நிதி	12100	00	தவணை வைப்புநிதி	16600	00
சந்தா முதலியன	2683	50	மணி விழா	28	00
ஆயுள் சந்தா	450	00	நன்கொடை	100	00
நன்கொடை	100	00	சிறப்பு நாட்கள்	190	45
மணிவிழா நன்கொடை	25	00	பழைய அலுவலக மின்சாரக் கட்டணம்	24	00
சிறப்பு நாட்கள் வரவு	100	00	புது அலுவலக வாடகையும் மின்சாரக் கட்டணமும்	408	00
ஆண்டு விழா வரவு	70	00	எழுத்துவகைச் சாமான்களும் பிறவும்	70	05
பாங்கு வட்டி	1101	24	1966ஆம் ஆண்டுத் தேர்வுப் பரிசு	50	00
புது அலுவலக வாடகை நன்கொடை	170	00	ஆங்கிலப் பத்திரிகைக்கு மாற்றம்	10	00
தேர்வுக் கட்டணம்	156	00	தபால் வகை	648	80
திரு. கா. இராமநாதன் செட்டியார் சமயக் கட்டளை	250	00	போக்கு வரவு	166	30
ஆண்டுவிழாவரவேற்புக் குழுவின் வரவு	291	00	ஆண்டு விழா வரவேற்புக் குழுவுக்குத் தந்தது	291	00
புத்தக விற்பனை வரவு	38	65	கையிருப்பு	3	42
			பாங்கு இருப்பு (S. B. Account)	1352	75
	22792	20		22792	20

சமாஜத்தின் தற்காலப் பொருள் நிலை

	ரூ.	பைசா
வைப்பு நிதி விவரம் :		
மலேயா சைவ சித்தாந்த சபையார் தந்தது	1000	00
சைவத் தேர்வுப் பரிசுக்கு ஓர் அன்பர் தந்தது	1000	00
சமயக் கட்டளைகட்குத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தந்தது (I & II)	2000	00
1963-ஆம் ஆண்டிலிருந்து சேர்ந்த ஆயுள் உறுப்பினர் தொகை	3850	00
சங்க இலக்கிய வெளியீட்டு உரிமை வரவு	1000	00
மலேயா திரு. சிவநேசன் செட்டியார் அவர்கள் கட்டட நன்கொடை	1000	00
மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் கட்டளை	750	00
மணலி - திரு. இராமகிருஷ்ண முதலியார் கட்டட நன்கொடை	4000	00
சமாஜ இருப்புத் தொகை	2000	00
மற்றைய நிதி விவரம் :		
ஆங்கில முத்திங்கள் வெளியீட்டுக்குக் கடனாகத் தந்தது	1789	82
கையிருப்பு	3	42
பாங்கு இருப்பு	1352	75
கையிருப்புப் புத்தகங்களின் (விற்பனை மதிப்பு)	3520	02
	23266	01

கே. எல். பழனிசாமி,	வா. ஆறுமுகம்,	பி. சோ. சண்முகம் பிள்ளை,	மு. நாராயணசாமி,
ஆண்டுத் தணிக்கையாளர்.	மாதத் தணிக்கையாளர்.	பொருளாளர்.	செயலாளர்.

'சைவ சித்தாந்தா' ஆங்கில முத்திங்கள் இதழின் வரவு செலவுத் தொகுப்பு

1—12—67 முதல் 30—11—68 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	13	71	ஆங்கில இதழ் அச்சுக்கூலி	1190	50
,, பாங்கு இருப்பு	969	59	காகிதம்	648	12
1967—1968 சந்தா	1220	60	பணியாள் சம்பளம்	36	00
விளம்பரம்	450	00	கட்டுரைகள் டைப் அடித்தது	14	00
நன்கொடை	500	00	தபால் செலவு	317	63
பாங்கு வட்டி	25	63	வண்டிச் செலவு	22	60
			பிற செலவுகள்	1	00
			ரொக்க இருப்பு	5	87
			பாங்கு இருப்பு	943	51
	3179	23		3179	23

கே. எல். பழனிசாமி, ஆண்டுத் தணிக்கையாளர்.
வா. ஆறுமுகம், மாதத் தணிக்கையாளர்.
பி. சோ. சண்முகம் பிள்ளை, பொருளாளர்.
மு. நாராயணசாமி, செயலாளர்.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டடப் பொறுப்பு வாரியம்
(எண் 2, 3, 4, ஈவினிங் பஜார் கடைகள்) வரவு செலவுத் தொகுப்பு
1—12—67 முதல் 30—11—68 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
சென்ற ஆண்டு இருப்பு ரொக்கம்	148	05	தேவார ஆசிரியர் சம்பளம்	960	00
பாங்கு	618	29	தேவார ஆசிரியர் இருவருக்கு சிறப்பாக வழங்கியது	330	00
பாங்கு வட்டி	18	59	பெரிய புராண சொற்பொழிவு (திரு. க. சோமசுந்தரஞ் செட்டியார்) நன்கொடை	112	00
கடைகளின் வாடகை	2670	00	பெரிய புராண பூர்த்தி விழா செலவு	70	00
			முனிசிபல் வரி	503	00
			சமாஜ அலுவலக வாடகை	360	00
			மூவர் திருநட்சத்திர நன்கொடை	75	00
			சமாஜ அலுவலர் சம்பளம்	160	00
			தபால் செலவு	2	60
			ஆண்டு இறுதி இருப்பு ரொக்கம்	176	95
			பாங்கு இருப்பு	705	38
	3454	93		3454	93

குறிப்பு : 22-11-65-ல் சமாஜத்துக்குக் கடனாகத் தந்த ரூபா நானூறு இன்னும் திரும்பப் பெறவில்லை.

அ. சோமசுந்தரஞ் செட்டியார், வா. ஆறுமுக முதலியார், நே. த. கிருஷ்ணசாமி முதலியார்
தலைவர் — தனிக்கையாளர் — பொறுப்பு அங்கத்தினர்

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	பைசா.
திருவாசகம் (எட்டாம் திருமுறை)	1	00
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)	1	00
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் முந்நூல் 0 40		
அறுபத்து மூவர்	0	06
வைர விழா மலர் 2 0		
அறப்பயிற்சிமாலை	0	50
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள்	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு 0 75		
பிரதோஷ வழிபாடு	0	20
நான் நம்புவன சில 0 10		
விநாயகர் வழிபாடு	0	20
கூட்டுவழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி — பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞானபோதம்—தெளிவுரையுடன்	0	50
திருவெம்பாவை—விசேட உரையுடன்	0	75

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் நூல்கள்

தற்போது கிடைக்கக்கூடியவை :

சைவ சமய சரபம்	2	50
நாலாயிரப் பிரபந்த விசாரம்	1	00
சேந்தன் செந்தமிழ் மூலமும் உரையும்	1	50
செவியறிவுறூஉ	0	20
பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	1	50
சிறுநூற்றிரட்டு	1	25
சிவஞான தீபம்	0	50

ஸ்ரீமத்: அருணகிரிநாத சுவாமிகள்	ரூ.	பைசா
சரித்திரச் சுருக்கம்	0	30
சைவ மகிமையும் சுருக்க அனுட்டான விதியும்	0	50
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும், குரு சீட சம்பவ வரலாற்று வியாசமும்	2	50
சமயங்களைக் குறித்த வியாசம்	1	25

தபால்—ரயில் செலவு தனி.

"சித்தாந்தம்"—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 50.

"சைவ சித்தாந்தா"—ஆங்கில முத்திங்கள் வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூ. 5.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

'SAIVA SIDDHANTA'

A HIGH CLASS ENGLISH QUARTERLY JOURNAL

DEVOTED TO

Philosophy, Religion & Culture

Run by

Saiva Siddhantha Maha Samajam,

12, East Mada Street, MYLAPORE, MADRAS-4.

Annual Subscription Rs. 5/- only.

PLEASE SUBSCRIBE AND ENCOURAGE.

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

தைத்திங்கள் சிறப்புநாள்கள்

8 (21-1-69)	சதயம்	— அப்பூதியடிகள் விழா
11 (24-1-69)	இரேவதி	— கலிக்கம்ப நாயனுர் விழா
16 (29-1-69)	மிருகசீரிடம்	— கண்ணப்ப நாயனுர் விழா
17 (30-1-69)	திருவாதிரை	— அரிவாட்டாய நாயனுர் விழா
19 (1-1-69)		— தைப்பூசவிழா
24 (6-2-69)	உத்திரம்	— சண்டேசுவர நாயனுர் விழா
,,	,,	— திலகவதியம்மையார் விழா
28 (10-2-69)	விசாகம்	— திருநீலகண்ட நாயனுர் விழா
,,	,,	— தாயுமான அடிகள் விழா

பிற செய்திகள்

புரசைத்திருநெறிக் கழகச் சார்பில் (22-12-68) அன்று 94-ஆம் திங்கள் வழிபாடு செங்கல்பட்டையடுத்த திருவடிணக் கோவில், காவிதண்டலம், ஒரைக்காட்டுப் பேட்டை ஆகிய ஊர்களில் உள்ள திருக்கோயில்களில் சிறப்புற நிகழ்ந்தது.

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட 21-ஆம் ஆண்டு நிறைவு விழா 27, 28, 29-12-68 ஆகிய மூன்று நாள்களிலும் குடந்தை ஸ்ரீ ஆதிகும்பேச்சுர சுவாமி கோவில் திருக்கல்யாண மண்டபத்தில் சிறப்புற நிகழ்ந்தது. மூன்று நாள்களிலும் முறையே T. N. சிங்காரவேலு B. A., B.L., தவத்திரு சுந்தர அடிகளார், திரு. டி. இராசராசேச்சுரன் பிள்ளை B. A., B. L., ஆகியோர் தலைமை தாங்கப் பல பெரு மக்கள் சொற்பொழிவாற்றினர்.

பொத்தனூர் (சேலம்) திருமுறை மன்றத்தின் 25-ஆம் திருமுறை விழா 30, 31—11—69 நாள்களில் சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் மறை திரு ஐ. ஆனந்தநடராஜ தீக்ஷிதர் M. A., B. O. L , மறைதிரு. ஐ. த. ரா. கணேச தீக்ஷிதர் ஆகியோர் தலைமையில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பல பெருமக்கள் பன்னிரு திருமுறைச் சொற்பொழிவாற்றினர். 25-12-68 அன்று புலவர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் பொத்தனூரில் திருவெம்பாவை பற்றிச் சொற்பொழிவாற்றினர்

திருவாப்பனூர்ச் சைவசித்தாந்தசபையில் (8-1-69) மாலை திரு. G. கலியாணம் எம். ஏ. அவர்கள் தலைமையில் திருவெம்பாவை விழா மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பலர் சொற்பொழிவாற்றினர்.

நாமம் மிழலையீர் சேமம் நல்குமே

(அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ.)

பண்டைக்காலத்துத் திருவீழி மிழலையில் கடும் பஞ்சம் வந்ததாம். அவ்வமயம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைப் பாடித் துதித்து அதைப் போக்கி மக்களுக்கு நல்வாழ்வு வகுத்தருளினர்.

தற்போதுள்ள நிலையைக் கூர்ந்து நோக்குமின். விலைவாசிகள் ஏறிக்கொண்டே செல்கின்றன. விளைச்சலைப் பெருக்க அரசியலார் பல்வேறு வழிகளில் முயன்றாலும் அவர்களுக்கும் மேலான இயற்கை அம்முயற்சிக்குச் சதி செய்கிறது. மழையின்றி மாநிலம் எவ்வாறு வாழ இயலும்? மழையின்மைக்குக் காரணம் யாது? பல காரணங்களைக் கூறினும் அவை தக்கனவாகக் கருதப்பெறமாட்டா. தக்கார்கள் யாவரும் பெருமான் திருககோயிலுக்குத் தூய்மையாகச் செல்லுங்கள். "நாமம் மிழலையீர்! சேமம் நல்குமே" என அன்று திருஞானசம்பந்தர் வேண்டுகோள் விடுத்து அருள் பெற்றது போன்று அவன் திருமுன்னர் விண்ணப்பம் செய்யுங்கள். கூட்டு வழிபாடு, சிறப்பு வழிபாடு முதலியவை மேற்கொள்மின். மடாலயத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள் இவ்வாறு தங்கள் சமய நிலையங்களிலும் வழிபாடாற்றுவதோடு ஒவ்வொருவரையும் கனிந்துருக நாளிதழ் வாயிலாகவும் வேண்டுகோள் விடுமின். அவ்வாறு வணங்கின் மிழலைவாழ் பெருமான் அருள்புரிவான் என்பது திண்ணம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.